வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 22.09.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 286 | பக்கங்கள் : 12




## கஜேந்திரன் எம்.பி உட்பட 4 பேருக்கு பிடியாணை!

திருமலை, செப். 22

திருகோணமலையில் திலீபன் நினைவு ஊர்தியை தாக்கிய 6 சிங்களவர்களும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, நேற்றைய வழக்கு விசாரணையில் முன்னிலையாகாத தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி ந. காண்டீபன் உள்ளிட்ட 4 பேருக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

கடந்த 17 ஆம் திகதி பொத்துவில் தொடக்கம் நல்லூர் வரை சென்றுகொண்டிருந்த தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி திருக்கோணமலையில் உள்ள சர்தாபுரம் என்ற இடத்தில் சிங்கள இனவாத குழுக்களால் தாக்கப்பட்டு, பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் தாக்கப்பட்டு இருந்தார்.

இந்த வன்முறை சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பெண்கள் உட்பட ஆறு பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு இருந்தனர்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த நபர்களை திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்கு முன்னெடுக்க நீதிமன்றம் அழைப்பு விடுத்திருந்த நிலையில், அடையாள காட்டுவதற்காக வாதி தரப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் மற்றும் பாதிக்கப்பட்ட இருவர் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர். எனினும் அன்று பொலிசார், சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்புக்கு

11

## சர்வதேச விசாரணை கோரி யாழில் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், செப். 22

இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு சர்வதேச நீதி பொறிமுறை வேண்டும் என வலியுறுத்தி கவனவீர்ப்பு போராட்டமொன்று நேற்று

11

## கோழி இறைச்சி புதிய விலை ரூ. 1,150


கொழும்பு, செப். 22

ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவால் குறைக்க கோழிப்பண்ணை உற்பத்தியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக வர்த்தக அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

இதன்படி, ஒரு கிலோ கோழி இறைச்சியின் புதிய சில்லறை விலை 1,150 ரூபாவாகும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய விலை இன்று முதல் அமுலுக்கு வரும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (அ)

# சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் வளர்ச்சியை நோக்கி இலங்கை!



## ஐ. நாவில் ஜனாதிபதி உரை

நியூயோர்க், செப்ரெம்பர் 22

**தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன், அனைவருக்கும் அமைதி மற்றும் செழிப்பை உறுதிசெய்வதோடு, நிலையான வளர்ச்சியை நோக்கி இலங்கையை இட்டுச் செல்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது பொதுச் சபை கூட்டத்தில் நேற்று இரவு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

காலநிலை மாற்றம் , தொற்றுநோய் பரவல் போன்ற நெருக்கடிகள் இலங்கை போன்ற சிறிய கடன் நெருக்கடிமிக்க நாடுகளுக்கு நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் காலநிலை முயற்சிகளை முன்னெடுப்பதில் தடையாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

உலகளாவிய வலுசக்தி மோதல்கள் பொருளாதார நிலையற்ற தன்மையை ஏற்படுத்தும் அதேநேரம், விநியோகச் வலையமைப்பை சீர்குலைத்து, உலகெங்கிலும் பணவீக்கம், உணவு பாதுகாப்பின்மை மற்றும் வலுசக்தி பாதுகாப்பின்மையை ஏற்படுத்தப்படுகிறது என்றார். (அ)

## இலங்கைக்கு தானியம் வழங்கியது உக்ரைன்!

கொழும்பு, செப். 22

ரஷ்யாவின் கடல் தடைக்கு மத்தியிலும் உக்ரைன் இலங்கை மற்றும் பிற நாடுகளுக்கு தானியங்களை வழங்கியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் கடல் முற்றுகை இருந்தபோதிலும், உக்ரைன் உலகெங்கிலும் உள்ள பல நாடுகளுக்கு தானியங்களை வழங்கியுள்ளது என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

அல்ஜீரியா, ஜிபூட்டி, எகிப்து, கென்யா, லிபியா, லெபனான், மொராக்கோ, சோமாலியா, துனிசியா, பங்களாதேஷ், சீனா, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, இலங்கை, தாய்லாந்து, வியட்நாம், ஈராக், ஓமன், பாகிஸ்தான், துர்கியே மற்றும் ஏமன் ஆகிய நாடுகளையும் உக்ரைன் ஜனாதிபதி பெயரிட்டுள்ளார்.

“எங்கள் தயாரிப்புகள் துறைமுகங்கள் வழியாக எத்தியோப்பியா மற்றும் சூடானை அடைந்துள்ளன. மொத்தம், 32 மில்லியன் தொன் உணவு வழங்கியுள்ளோம் என அவர்

11

## பைடனை சந்தித்த ரணில்



நியூயோர்க், செப். 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் இடையிலான சந்திப்பு நியூயோர்க்கில் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்குபற்றிய அனைத்து நாட்டுத் தலைவர்களுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வழங்கிய இரவு விருந்துபசாரத்தின் போதே இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை மிகவும்

11

## வேறு ஆள் கிடைக்காதமையால் மஹிந்தவை பிரதமராக்கினேன்

### சபையில் கூறினார் மைத்திரிபால

கொழும்பு, செப். 22

நல்லாட்சி காலத்தில் மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன நேற்று பாராளுமன்றத்தில் கருத்து வெளியிட்டார்.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பான விவாதத்தில் நேற்று பாராளுமன்றத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், தாக்குதலுக்கு முன்னதாக பாதுகாப்புச் சபையை அழைக்குமாறு தாம் கோரவில்லை என்ற கூற்றை முற்றாக நிராகரிப்பதாக தெரிவித்தார்.

தன்னிடம் அவ்வாறான கோரிக்கை எதுவும் முன்வைக்கப்படவில்லை என தாம் தெளிவாகக் கூறியதாக அவர் குறிப்பிட்டார்.

அப்போது சபாநாயகராகச் செயற்பட்ட கரு ஜயசூரியவிடம் கோட்பாட்டு ரீதியில் பிரதமருடன் இணைந்து செயற்பட முடியாத நிலையில் 4 நாட்கள் பேசியதாகவும் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

கரு ஜயசூரிய

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# நாட்டில் மீண்டும் இன முறுகல் ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி

கொழும்பு, செப். 22

அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளை பார்க்கும்போது மீண்டும் தமிழ், சிங்கள மக்களுக்கு இடையே இன முறுகலை ஏற்படுத்தி அரசாங்கத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கை இடம்பெறுகிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

அதேபோன்று ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளை இனம் காண அரசாங்கத்தில் இருக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என கேட்கிறோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற காடு பேணல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தின் செயல்பாடுகளை பார்க்கும் போது எமது நாடு எந்த திசையை நோக்கி நகர்கிறது என்று சிந்திக்க தோன்றுகிறது. இன்று நாட்டில் இனவாதத்தை ஏற்படுத்துகின்ற செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறதா என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீதான் தாக்குதல் போன்ற நடவடிக்கைகள் மீண்டும் தமிழ், சிங்கள மக்களுக்கு இடையே இன முறுகலை ஏற்படுத்தி அரசாங்கத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் செய்கிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இன்று மக்களின் பிரச்னைகள் திசை திருப்பப்படுகின்றன. உத்திக பிரேமரத்ன மீதான துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை. மக்களின் பிரச்னைகளை மறைக்க வேண்டும் என்பதற்காக பிரச்னைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவை தொடர்பில் அரசாங்கம் உரிய முறையில் ஆராயவேண்டும்

அத்துடன் ஈஸ்டர் தாக்குதல் மூலமாக இந்த நாட்டில் இனவாதம் தலைதூக்கியது. முஸ்லிம்கள் அனைவரும் இனவாதிகளாக்கப்பட்டனர். நாட்டில் ஏற்பட்ட அறகலய போராட்டக்காரர்களை கைது செய்வதற்கு காட்டிய ஆர்வத்தை ஏன் ஈஸ்டர் தாக்குதலுக்கு காட்டவில்லை.

தற்போதுள்ள பிரச்னைக்கு காரணமாக அமைந்தது ஈஸ்டர் தாக்குதலே. இன்று சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும் பேச்சாளர்களாக மாறியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் முஸ்லிம் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்துவிட்டதைப் போன்று-மக்களின் பிரச்னைகளுக்காக குரல் கொடுத்தது நாங்கள்தான் என்பதை இப்போதுதான் சுட்டிக்காட்டுகிறார்கள். நீங்கள் ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கண்டறிவதற்கு ஏன் முன்வரவில்லை- என்றார். (அ)

## இப்படியும் நடக்கிறது

சில மாதங்களுக்கு முன்னர் நண்பர் ஒருவர் என்னிடம் ஆலோசனை கேட்டார். அவர் ஒரு மூத்த பத்திரிகையாளர். அவரைப்பற்றி எழுதுவதானால் இந்த பத்தி அல்ல, பல பத்திகளை எழுதினாலும் அவரைப்பற்றி எழுதி முடியாது. அதனால் அவரைப் பற்றிய குறிப்புகளைத் தவிர்த்து அவர் கேட்ட விடயத்துக்கு வருகின்றேன்.

'நமது மக்கள் இன்று இத்தனை அழிவுகளைச் சந்தித்த பின்னரும் ஒரு நிலையான தீர்வு இன்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் இந்த நிலைக்கு நாங்களும் (அதாவது பத்திரிகையாளர்களும்) ஒரு காரணம். அதிலும் எனக்கு அதிக பங்கு உண்டு. அதற்கு பிரதியுபகாரமாக-சில கோரிக்கைகளை முன்வைத்து நல்லூரில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கலாம் என்று யோசிக்கிறேன். அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?' என்றார்.

எனக்கு பதில் சொல்ல கடினமாக இருந்தது. 'நீங்கள் உண்ணாவிரதம் இருப்பதன் மூலம் தீர்வு கிடைக்கும் என்று நம்புகிறீர்களா?' என்று கேட்கவேண்டும் போல இருந்தது. ஆனால், அவரது கோரிக்கை பற்றி விவாதித்து அவரை சங்கடப்படுத்த மனம் இடம் தரவில்லை.

இந்த விடயத்தை இப்போது எழுதவேண்டிய அவசியம் என்ன என்று நீங்கள் கேட்கலாம்.

நேற்று இந்தப் பத்தியில் சுவாமி சங்கரானந்தா என்ற பெயரில் முகநூலில் எழுதப்பட்ட பத்தி ஒன்று பற்றி எழுதியிருந்தேன். அதனைப் படித்த நண்பர் ஒருவர் நேற்று தொலைபேசியில் தொடர்புகொண்டார்.

அவரும் அந்தப் பத்தியை முகநூலில் முழுமையாக படித்திருக்கிறார் என்பது தெரிந்தது. 'தமிழரசு கட்சி, தந்தை செல்வாவின் அஸ்தியை திருகோணமலைக்கு கொண்டு சென்றதால் ஏற்பட்ட விளைவுகளை வெளிச்சம் போட்டுக்காட்டிய நீங்கள் ஏன் அவர் எழுதிய மற்றைய விடயங்களைத் தவிர்த்தீர்கள்?' என்று கேட்டார்.

'அது வேறு எதற்காகவும் அல்ல, திலீபனின் நினைவு வைபவத்தை சர்ச்சையாக்கி அதுகுறித்து எழுதுவதைத் தவிர்க்க விரும்பினேன் அவ்வளவுதான். அதைவிட, யாரையும் திலீபனைப்போல நீங்களும் உங்களைத் தியாகம் செய்தால் என்ன என்று கேட்பது சரியானதாகவும் படவில்லை. அதனால் தவிர்த்தேன்' என்றேன்.

நண்பர் விடுவதாக இல்லை. 'இல்லை, முன்னணியினருக்கு அவர் சொல்லியிருக்கின்ற யோசனை என்ன என்பதையாவது நீங்கள் சொல்லியிருக்கலாம்' என்றார்.

அவரின் கோரிக்கையை தவிர்க்க முடியவில்லை அதனால் சுவாமி சங்கரானந்தா என்பவர் எழுதிய அந்தப் பத்தியின் இறுதிப் பகுதியையும் கீழே தருகின்றேன்.

'மாவீரர் நாளை அரசியல் மயப்படுத்துவதும், பசீர் காக்க போன்ற மூத்த போராளிகளை அசிங்கப்படுத்துவதும், ஏதோ தாங்களே மக்கள் பிரதிநிதிகள் போலவும் தமிழ் தேசியவாதிகள் போலவும் எண்ணம் கொண்டு மற்றவர்களுக்கு துரோகிப் பட்டம் கொடுப்பதுதான் அவர்களின் சில்லறைத்தனமான அரசியலாகும். எந்த தமிழ் கட்சிகளுடனும் ஒற்றுமையாக நின்று கேட்க வேண்டியதை கேட்காமல் எதிர்க்க வேண்டியதை எதிர்க்காமல் பெறவேண்டியதை பெற்றுக் கொள்ளாமல், அரசியல் செய்யும் இவர்கள்,

சுழற்சி முறையில் ஒருவர் பின் ஒருவராக சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு அதனை தியாக தீபம் திலீபன் ஆகுதியான நல்லூர் வீதியில் ஆரம்பிக்க வேண்டும்...!

அப்படி செய்தால், உலகத் தமிழர்களினாலும் இந்தியத் தமிழர்களினாலும் ஈழத்தமிழர்களினாலும் வெடிக்கும் புரட்சியில் சர்வதேசங்களும் ஆதரவு வழங்க ஒரு நாடு இரு தேசம் அல்ல தனிநாடக தமிழீழம் அடைவது உறுதி ....' - இப்படி செல்கின்றது அவரின் கோரிக்கை.

அவரின் கோரிக்கையை இந்த ஊர்க்குருவி ஆதரிப்பதாகவோ, அல்லது அவர்கள் அவ்வாறு செய்வதன் மூலம் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு வரும் என்றோ இங்கே வாதிடப்போவதில்லை.

முள்ளிவாய்க்காலில் இறுதி யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது, அப்போது இருந்த இருபத்தியிரண்டு எம்.பி.க்களும் அத்தகைய போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தாலேயே நிலைமைகள் தலைகீழாக மாறியிருக்கும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி ஐயா அடிக்கடி சொல்வதுதான் ஞாபகத்திற்கு வந்தது. அப்போது காணாமல்போனவர்கள் பின்னர் யுத்தம் முடிந்த பின்னரே வெளியே வந்தார்கள். ரெலோ எம். பி. சிவாஜிலிங்கமும் சிறீகாந்தாவும் மட்டுமே இந்தியாவில் சென்னையிலும் புதுடில்லியிலும் நின்று யுத்தத்தை நிறுத்த கோரிக்கையாவது விடுத்துக்கொண்டிருந்தார்கள். மற்றையவர்கள் எவரையும் காணவே முடியவில்லை. அப்போது செய்திருந்தால்கூட எதுவும் நடந்திருக்குமோ தெரியவில்லை.!

**- ஊர்க்குருவி.**

## திலீபனின் வரலாற்றை எடுத்தியம்பும் ஆவணக் காட்சியகம் நாளை திறப்பு!

யாழ்ப்பாணம், செப். 22

தியாக தீபம் திலீபனின் வரலாற்றை எடுத்தியம்பும் ஆவண காட்சியகம் இன்று யாழ்ப்பாணம் நல்லூரில் திறந்து வைக்கப்படவுள்ளது.



"பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!!" என்னும் தொனிப்பொருளுடன் இன்னும் மாலை 6 மணிக்கு நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்றலில் முன்னாள் போராளிகளின் மற்றும் பெற்றோரின் பங்கேற்புடன் குறித்த காட்சியகம் திறந்து வைக்கப்படவுள்ளது. (அ)

## கமக்கார அமைப்பின் காலபோகக் கூட்டம்!

யாழ்ப்பாணம், செப். 22

இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் காலபோக கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கமக்காரர்கள் அனைவரையும் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# பயங்கரவாத தடைச் சட்டம் எந்த வடிவிலும் வேண்டாம்

## செல்வம் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, செப். 22

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐ.நாவுக்கு சென்று ஜனநாயகம் பற்றி பேசினாலும், அவர் தலைமையிலான அரசு நாட்டில் ஜனநாயகத்தை ஒடுக்கும் செயலில் ஈடுபட்டுள்ளது என்பதையே புதிய பயங்கரவாத தடுப்பு சட்டமூலம் காண்பிக்கின்றது. எனவே, எந்த வடிவிலும் பயங்கரவாத தடைச்சட்டம் தேவையில்லை. அது நீக்கப்படவேண்டும்."

-இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலாக புதிதாக முன்வைக்கப்படவுள்ள பயங்கரவாத திருத்தச் சட்டம் தொடர்பான சட்டமூலம் வர்த்தமானியில் வெளிவந்துள்ளது. இதன் அடிப்படையில் பார்க்கையில் இரண்டும் ஒன்றுபோல்தான் தெரிகின்றது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் ஊடக சுதந்திரத்துக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. ஜனநாயக விழுமியங்கள் ஒடுக்கப்படுவதற்கான வாய்ப்பை உத்தேச சட்டம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

எனவே, அடக்குமுறை, மோசமான வன்முறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலையில், ஜனநாக மரபுகளை ஒடுக்கும் செயல் ஏற்புடையது அல்ல.

ஜனாதிபதி எல்லா இடங்களுக்கும் சென்று ஜனநாயகம் பற்றி பேசுகின்றார், ஆனால் புதிய பயங்கரவாத திருத்தச்சட்டம் ஊடாக மீண்டும் அடக்குமுறையை கொண்டுவருகின்றனர். இது எந்த விதத்தில் நியாயம்? புதிய சட்டமூலம் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என ஐ.நா. வலியுறுத்துகின்றார். ஆனால் அதற்கு பதிலாக புதிய சட்டம் கொண்டுவரப்படும் என அரசு கூறுகின்றது. எம்மை பொறுத்தவரையில் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். அதற்கு நிகரான புதிய சட்டம் தேவை இல்லை." - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
22.09.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், புரட்டாதி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# ஈஸ்டர் தாக்குதல் - வாய்ப்பா அல்லது சாபமா?

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் இடம்பெறவுள்ளது. கடந்த சில நாட்களாக - ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில்தான் அனைவரும் விளங்கியோ - விளங்காமலோ பேசி வருகின்றனர். எதை வைத்து, அரசாங்கத்துக்கு நெருக்கடியை கொடுக்கலாமென்று சிந்தித்துக் கொண்டிருந்த எதிரணியினரின் முன்னால் சனல் -4 பழமொன்றை தூக்கி பாலுக்குள் வீசியிருக் கின்றது. அவர்களும் பாலுக்குள் கிடக்கும் பழத்தை அவரவருக்கு ஏற்றவாறு கடித்துச் சாப்பிடுவதில் முட்டி மோதுகின்றனர். மூவரடங்கிய குழுவொன்றை நியமித்துவிட்டு ரணிலோ அமைதியாக அவர் வேலையை பார்த்துக் கொண்டிருக்கின்றார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விவாதங்களையும் - அது தொடர்பான சர்வதேச விசாரணை கோரிக்கைகளையும் நோக்கும் போது, 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்க இரட்டை கோபுரங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்தான் நினைவுக்கு வருகின்றது. அந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கும் நமக்கும் எவ்வித தொடர்புமில்லை. ஆனாலும் நம்மையும் அந்தத் தாக்குதல் நிலைகுலைய வைத்தது. ஒரே நாளில் உலக அரசியல் ஒழுங்கு மாறிப் போனது. விடுதலைப் புலிகள் அமைப்பின் எதிர் காலத்தின்மீதும் சனி பிடித்துக் கொண்டது. அது ஒரு ஏழரைச் சனியென்பதை, அப்போது விடுதலைப் புலிகள் அமைப்பால் சரிவர புரிந்துகொள்ள முடியவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பு மீளவும் யுத்தத்தை ஆரம்பித்தபோதே அந்தச் சனியின் முழுப்பலமும் புரிந்தது. ஆனால், அப்போது புலிகளோ தப்பித்துக்கொள்ள முடியாத ஒரு கட்டத்துக்குள் பிரவேசித்திருந்தனர்.

இப்போது ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை யொன்று தேவையென்று எதிரணிகள் கூறுகின்றன. கத்தோலிக்க தலைவர்கள் கூறுகின்றனர். ஆனால், இது சர்வதேச விசாரணைக் கோரிக்கையின் இரண்டாம் பாகம். முதலில் தமிழர்கள் சர்வதேச விசாரணையை கோரியிருந்தனர். கடந்த பதினான்கு ஆண்டுகளில் அதற்கான சிறு அசைவைக்கூட காண முடியவில்லை. ஆனாலும் சில பரிந்துரைகளை மனித உரிமைகள் பேரவை முன்வைத்திருந்தது. ஆனால் தற்போது, தமிழர்களின் கோரிக்கையை இரண்டாம் நிலைக்கு தள்ளக் கூடியவாறு, பிறிதொரு சர்வதேச விசாரணைக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக சனல் -4 வெளியிட்ட காணொலி ஒன்றுதான் இருக்கின்றது. இந்தக் காணொலியின் நம்பகத்தன்மை சிக்கலானது. ஏனெனில், ஒரு குறிப்பிட்ட நபர் மட்டுமே சாட்சியாக முன்வைக்கப்பட்டிருக்கின்றார். ஆனால், அந்த நபரின் கடந்தகாலமோ, நம்பத்தகுந்த ஒன்றாகவும் இல்லை. இவ்வாறானதொரு பலவீனமான சாட்சியை முன்வைத்து, ஏன் இவ்வாறானதொரு காணொலி வெளியிடப்பட்டது - கேள்விக்கு பதிலை காண்பதும் சிரமம்.

இந்த நிலையில் சனல்- 4 வெளியிட்ட ஈஸ்டர் தாக்குதல் காணொ லியை மேற்குலக தூதரகங்கள் பெரிதாக பொருட்படுத்தவில்லை. ஏனெனில், இந்தத் தாக்குதல் எல்லை தாண்டிய இஸ்லாமிய பயங்க ரவாத அமைப்பின் வேலையென்பதில் அவர்களிடம் இரு வேறு கருத்துகள் இல்லை. இந்த நிலையில் சனல் -4இன் - ஈஸ்டர் காணொலி நிராகரிக்கப்படும்போது இறுதி யுத்தம் தொடர்பில் வெளியிடப்பட்ட காணொலியும் செல்லாக்காசாக நேரிடும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகளின் முன்னைய தாக்குதல் எவ்வாறு தமிழ் தேசிய அரசியலுக்கு சாபமாக மாறியதோ - அதேபோன்று, பிறிதோர் இஸ்லாமிய தாக்குதலான ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை கோரிக்கையும் தமிழ் மக்களின் நலன்களை வெற்றிகொள்ளும் நகர்வுகளில் ஒரு சாபமாக மாறுவதற்கான அதிக வாய்ப்புகள் உண்டு.

# மக்களின் காணிகளை ஒப்படைத்து வாழ்வாதாரத்துக்கு வழியேற்படுத்துக!

## *ரிஷாத் எம்.பி சபையில் தெரிவிப்பு*

*கொழும்பு, செப். 22*

*வன இலாகா திணைக்களமும் படையி னரும் கையகப்படுத்தியுள்ள மக்களின் காணி களை விடுவித்து, அவர்களின் வாழ்வாதாரங் களுக்கு வழியேற்படுத்த வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.*

*பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வன வளங்களைப் பாதுகாத்தல் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*வர்த்தமானியால் 1984இற்குப் பின்னர் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணி களை விடுவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு, வெளியிடப்பட்ட வர்த்தமானியால் பொது மக்களின் அதிகளவான காணிகள் வன இலா காத் திணைக்களத்திடமும் படையினரி டமும் சென்றுள்ளன. வதிவிடக்காணிகள், மேய்ச்சல் காணிகள் மற்றும் மேட்டுநில ஜீவனோபாயக் காணிகள் என்பவையே இவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், 85 வீதமான காணிகள் வன இலாகாவுக்கும் எஞ்சிய 15 வீதக் காணிகள் மக்களுக்கும் கிடைத்துள்ளன.*

*முசலிப் பிரதேச மக்கள் 1990இல் புலம்பெயர்ந்து, 2009 இற்குப் பின்னர் சொந்த இடங்களுக்கு வந்தபோது, அவர் களது காணிகளில் 85 வீதமானவை வன இலாகாவிடம் சென்றிருந்தது. இதனால், எஞ்சிய காணிகளிலே வாழவும் தொழில் புரியவும் இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட் டுள்ளனர்.*

*முள்ளிக்குளம் மற்றும் சிலாவத்துறை கிராமங்கள் கடற்படையினரின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனால், இப்பகுதியிலுள்ள முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி, முசலி, கொண்டச்சி சிலாவத் துறை மற்றும் அரிப்பு பாலம் போன்ற பகுதி களில் மீன்பிடிக்கச் செல்வோர் கைதாகி அபராதம் விதிக்கப்படுகின்றனர். மோதர கம்மான ஆற்றுப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்வோர் கைதாகி அபராதம் விதிக்கப்படு கின்றன. நாளொன்றுக்கு ஐநூறு ரூபாய் உழைக்கும் இம்மக்களிடம், ஐம்பதாயிரம் ரூபாய் அபராதம் அறவிட்டால் இவர்கள் எங்கே செல்வது?*

*கொண்டச்சி குளத்தின் புனரமைப்புப் பணிக்காக ஒதுக்கப்பட்ட நிதி திருப்பப்பட் டுள்ளது. இந்தக் குளம் வன இலாகாவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதால் புனர மைக்க முடியாதென அறிவித்துள்ளனர்.*

*இதேபோன்றுதான், அக்கரைப்பற்று வட்டமடுக் காணியையும் வன இலாகா பிடித்துவைத்துள்ளது. இதில் 480 ஏக்கரை யாவது விடுவிக்க நடவடிக்கை எடுங்கள். இதை மீட்பதற்காக உழைத்த விவசாயிகளில் பலர் இறையடிசேர்ந்தும் விட்டனர்.*

*மன்னாரில் தேசிய மீலாத் விழா கொண் டாடப்படவுள்ளது. எனினும், இப்பகுதியில் எந்த அபிவிருத்திகளும் இடம்பெறவில்லை. தேசிய மீலாத் விழா இடம்பெறும் பகுதிகள் அபிவிருத்திச் செய்யப்படுவதே வழமை. ஆனால், இப்பகுதியில் பள்ளிவாசல்கள் கூட அபிவிருத்திச் செய்யப்படவில்லை. கோமா ளியாக உள்ள பிரதேச செயலாளரை வைத் துக்கொண்டு சிலர், தமக்கேற்றவாறு மகுடி ஊதுகின்றனர்.*

*ஆகக்குறைந்தது எங்களால் திறக்கப் பட்ட புத்தளம், மன்னார் பாதையையாவது மீளவும் திறந்து தாருங்கள். மக்களின் போக்குவரத்துச் சிரமங்கள் இதனால் நூறு கிலோமீற்றர் குறையும்-என்றார். (அ)*

# அறுகம்குடா சுற்றுலா அபிவிருத்தி திட்டத்தை மேம்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்

*கொழும்பு, செப். 22*

*அறுகம் குடா சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தை மேம்படுத்துவது தொடர் பிலான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.*

*ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.*


*அத்துடன், குறித்த பகுதிகளின் உட்கட்ட மைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் காணப்படும் பிரச்னைகள் மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாட்டின்போது ஏற்படும் சவால்கள் தொடர்பில் இதன்போது விரிவாக அவதானம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதன்போது, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட சுற்றுலாத்துறை திட்டமும் வெளியிடப்பட்டுள்ளது.*

*அத்துடன், மூன்று வருடங்களுக்கான மேற்படி திட்டத்தை ஜனாதிபதியின் கருத்தறிவதற்காக சமர்ப்பிக்கவுள்ளதாக சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.*

*மேற்படி செயற்பாடு களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக ஒரு மாதத்தில் மீண்டும் கூடுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**செப்ரெம்பர் - 22 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - புரட்டாசி 05**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 10.30 - 12.00**
**திதி : அஷ்டமி**




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**இடபம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். நம்பிக்கை நாள்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும்.

**கடகம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ப உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். புது தொழில் தொடங்குவீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பணக்றையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வீடுமனை வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். உங்களை அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். தைரியம் கூடும்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புதுமுடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். பணிகளை முடிப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தவில்லை என்று ஆதங்கப்படுவீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**தனுசு**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களின் மோதல்கள் வரக்கூடும். விழிப்புடன் செயல்படவேண்டிய நாள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். புது பொறுப்பை ஏற்பீர்கள். புகழ் கௌரவம் உயரும்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

# தமிழ்நாடு ஆளுநரை மாற்றக்கோரி 50 இலட்சம் பேரின் கையொப்பங்கள்

## மனுவை குடியரசு தலைவரிடம் வழங்கினார் வைகோ

சென்னை, செப். 22

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியை பதவி நீக்க வலியுறுத்தி 50 இலட்சம் பேர் கையெழுத்திட்டுள்ள படிவங்களை குடியரசு தலைவர் மாளிகையில் ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ வழங்கியுள்ளார்.

தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக செயல்படுவதாகவும், மக்கள் விரோத நடவடிக்கைகளை எடுப்பதாகவும் கூறி, அவரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி ம. தி. மு. க. சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது. சென்னையில் உள்ள ம. தி. மு. க. தலைமை அலுவலகத்தில் கையெழுத்து இயக்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு கடந்த ஜூன் 20ஆம் திகதி தொடங்கி வைத்தார்.

பின்னர், தமிழகம் முழுவதும் மக்கள் பிரதிநிதிகள், பொது மக்களிடம் கையெழுத்து பெறும் முயற்சியில் ம. தி. மு. க. நிர்வாகிகள் ஈடுபட்டனர். இவ்வாறு பெறப்பட்ட கையெழுத்து படிவங்களை, ரயில் மூலம் டில்லிக்கு கொண்டு சென்றனர். இந்நிலையில், இந்த கையெழுத்து படிவங்களை குடியரசுத் தலைவர் மாளிகை அலுவலகத்தில் மதிமுக பொது செயலாளர் வைகோ, கணேசமூர்த்தி எம்.பி. ஆகியோர் நேற்றுமுன்தினம் வழங்கினர்.

பின்னர், செய்தியாளர்களிடம் வைகோ கூறியவை வருமாறு,

ஜனநாயகத்துக்கு விரோதமாக செயல்படும் தமிழக ஆளுநர் ஆர். என். ரவியை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து நடத்தப்பட்ட கையெழுத்து இயக்கத்தில் முன்னணி அரசியல் தலைவர்கள், 57 எம். பிக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி தலைவர்கள் உட்படதமிழகத்தில் 50 இலட்சம் பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் கையெழுத்து படிவங்களை ஒப்படைத்துள்ளோம். 'குடியரசுத் தலைவரின் பார்வைக்கு உங்கள் கோரிக்கை மனு அனுப்பப்படும். அவர் தரும் பதிலை தெரிவிக்கிறோம்' என்று குடியரசுத் தலைவர் மாளிகை தரப்பில் உறுதி அளித்துள்ளனர் - என்றார்.

(ஐ)

# நீட் தேர்வின் பலன் பூச்சியம் பா. ஜ. க. அரசு ஏற்றுள்ளது!

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு

*சென்னை, செப். 22*

*"நீட் தேர்வின் பலன் என்ன என்றால் '0' தான் என்பதை ஒன்றிய பா. ஜ. க. அரசே ஒப்புக் கொண்டிருக்கிறது. நீட் = 0 என்றாகி விட்டது. இதைத்தான் நாங்கள் இத்தனை ஆண்டுகளாகச் சொல்லி வந்தோம். எத்தனை உயிர்கள் பலியாகி இருக்கின்றன. இரக்கமே இல்லாமல் இருந்துவிட்டு இப்போது இப்படி ஓர் உத்தரவு போட்டிருக்கிறார்கள்" என்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.*

*இதுதொடர்பாக தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "நீட் தேர்வின் பலன் என்ன என்றால் '0' தான் என்பதை ஒன்றிய பா. ஜ. க. அரசே ஒப்புக் கொண்டிருக்கிறது. முதுநிலை மருத்துவப் படிப்புக்கான தகுதி மதிப்பெண் '0' தான் என்று வரையறுப்பதன் மூலமாக நேநுநுவு என்றால்* **National Eligibility Cum Entrance Test** *என்பதில் உள்ள* **Eligibility***க்குப் பொருள் கிடையாது என்பதை அவர்களே ஒப்புக் கொண்டு விட்டார்கள். பயிற்சி நிலையங்களில் சேருங்கள், நீட் தேர்வுக்கு பணம் கட்டுங்கள், போதும் என்றாகி விட்டது.*

*நீட் = 0 என்றாகி விட்டது. இதைத்தான் நாங்கள் இத்தனை ஆண்டுகளாகச் சொல்லி வந்தோம். எத்தனை உயிர்கள் பலியாகி இருக்கின்றன. இரக்கமே இல்லாமல் இருந்துவிட்டு இப்போது இப்படி ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். நீட் என்ற பலிபீடத்தைக் கொண்டு உயிர்களைப் பறிப்பதற்காகவே இந்த பா. ஜ. க. ஆட்சியை அகற்றியாக வேண்டும்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.*

*முன்னதாக, முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கு அதிக இடங்கள் வெறுமையாக உள்ளதால், அவற்றை நிரப்புவதற்காக நீட் தகுதி மதிப்பெண்ணை பூச்சியமாக மருத்துவ கலந்தாய்வு குழு அறிவித்துள்ளது நினைவு கூரத்தக்கது.*

*(ஐ)*

# மகளிருக்கு 33வீத இடஒதுக்கீடு தமிழக தலைவர்கள் வரவேற்பு

*சென்னை, செப். 22*

*பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக செவ்வாய்க்கிழமை மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட மசோதாவுக்கு அரசியல் தலைவர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் கூறியிருப்பதாவது:*

*அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி - நாட்டை வழி நடத்துவதிலே பெண்களுக்கு உரிய பங்கு வழங்கப்பட வேண்டும் என்றகருத்தை முன் வைத்து தமிழகத்தில் உள்ளாட்சி பதவிகளில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடும் பின்னர் அதையே 2016-ல் 50 சதவீத இடஒதுக்கீடாக உயர்த்தி வழங்கி,மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பெண் இனத்துக்கே பெருமை சேர்த்தார். அதேபோல் 1991இல் முதன்முதலாக ஆட்சிஅமைத்த போதுதான் அவருடன் 31 பெண் சட்டப்பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாடாளுமன்றத்தில் இந்தியா முழுவதற்கும் நிறைவேற்றப்பட்டுள்ள புதிய மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை அதிமுக சார்பில் வரவேற் கிறேன்.*

*தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்த்:*

*பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவை தே. மு. தி. க. வரவேற்கிறது. இது ஒட்டுமொத்த பெண் இனத்துக்கு கிடைத்த வெற்றி. இதைச் செயல்படுத்தும் வகையில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளை விரைந்து தொடங்க வேண்டும் எனமத்திய அரசை கேட்டுக் கொள்கிறேன்.*

*அ. ம. மு. க. பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்:*

*பாராளுமன்றம் மற்றும் மாநில சட்ட பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் சட்ட மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதேநேரம், நீண்டகாலமாக நடத்தப்படாமல் இருக்கும் மக்கள் தொகை மற்றும் சாதிவாரி கணக்கெடுப்புக்கான பணிகளை உடனடியாக தொடங்குவதோடு, இட ஒதுக்கீடுமசோதாவின் மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் போதுமான அளவு இருப்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.*

*மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் - பெண்களுக்கான இடஒதுக்கீட்டு மசோதாவை முழு மனதோடு வரவேற்கிறேன். இதேநேரம், மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் தொகுதிகள்வரையறைக்குப் பிறகே நடைமுறைக்கு வரவுள்ள இந்த ஒதுக்கீட்டை, விரைந்து செயல்படுத்த வேண்டும். மாநிலங்களவை, சட்டமேலவையிலும் வழங்கும் வகையில் இடஒதுக்கீட்டை விரிவுபடுத்த வேண்டும் - என்றார்.* *(ஐ)*

# எரிபொருள் செலவைக் குறைத்தால் மின் கட்டணத்தை குறைக்கமுடியும்

## இந்திக்க அனுருத்த சுட்டிக்காட்டு



**கொழும்பு, செப். 22**

**நாட்டின் 70 சதவீத மின்சாரத் தேவையை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஊடாக பூர்த்தி செய்வதன் மூலம் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அபிவிருத்தி செய்வதன் மூலம் எரிபொருளுக்காக செலவிடப்படும் பணத்தை நாட்டில் தக்க வைத்துக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டார்.

எரிபொருளுக்கான செலவினத்தை குறைப்பதன் மூலம் மின் கட்டணத்தை குறைக்க முடியும்.

இதற்காக செலவிடப்படும் பணத்தை ஏனைய அபிவிருத்தி திட்டங்களுக்கு பயன்படுத்த முடியும் என இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

தற்போது, கூரைகளில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின்கலங்களின் ஊடாக 685 மெகாவாட் மின்சாரமும், நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின்கலங்களினால் 140 மெகாவாட் மின்சாரமும், காற்றாலை மின் நிலையங்களின் ஊடாக 263 மெகாவட் மின்சாரமும் மின்கட்டமைப்புக்கு வழங்கப்படுவதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த கூறினார். (அ)

# ஜனாதிபதி செயலக பெயர்ப்பலகையை வாகனங்களில் காட்சிப்படுத்த வேண்டாம்

கொழும்பு, செப். 22

ஜனாதிபதி செயலகத்தின் அனைத்து அதிகாரிகள் மற்றும் சாரதிகள் தமது வாகனங்களில் ஜனாதிபதி செயலக பெயர்ப் பலகையை காட்சிப்படுத்த வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதில் செயலாளரினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், இவ்வாறான பெயர்ப் பலகைகளை காட்சிப் படுத்துகின்ற எந்தவொரு வாகனமும் ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புடையவை அல்ல எனவும் ஜனாதிபதியின் பதில் செயலாளர் கூறியுள்ளார்.

அத்தோடு அவ்வாறு பெயர்ப் பலகையை காட்சிப்படுத்தும் வாகனங்கள் பொதுமக்களை ஏமாற்ற மேற்கொள்ளப்படும் ஆள்மாறாட்ட முயற்சி எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (அ)

# வாழ்வாதாரம் பாதிப்பு!

## மன்னார் மீனவர்கள் விசனம்

மன்னார், செப். 22

இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதனால் தமது வாழ்வாதாரம் பாரியளவு பாதிக்கப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர்கள் இந்த விடயத்தை குறிப்பிட்டனர்.

அத்துடன், இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையினால் தமது பல இலட்சம் பெறுமதியான வலைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# இலஞ்சம் வாங்கிய முகாமையாளர் கைது!

கொழும்பு, செப். 22

75000 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றதாகக் கூறப்படும் நொச்சியாகம மகாவலி அதிகார சபையின் பதில் முகாமையாளர் இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவினரால் சந்தேகத்தின் பேரில் அலுவலகத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணியை ஒருவருக்கு மாற்றுவதற்காக இந்த தொகையை இலஞ்சமாக பெற்றுக்கொண்டார் என்ற சந்தேகத்தின் பேரில் பதில் முகாமையாளர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு கைது செய்யப்பட்டதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட பதில் முகாமையாளர் நொச்சியாகம நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார். (அ)

# கோவா செய்கையை கைவிடும் நிலைமை!

கொழும்பு, செப். 22

கோவா செய்கையை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டனர்.

தங்களது உற்பத்திக்கு உரிய விலை கிடைப்பதில்லை என்றும் கோவா செய்கையாளர்கள் குற்றம் சுமத்தினர்.

தற்போது, ஒரு கிலோ கிராம் கோவா 25 முதல் 30 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் தங்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படுவதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இதன் காரணமாக தாங்கள் பல்வேறுப்பட்ட இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக கோவா செய்கையாளர்கள் தெரிவித்தனர். (அ)

# விவசாயிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபாய்!

கொழும்பு, செப். 22

இந்த முறை பெரும் போகத்தின் போது உர கொள்வனவிற்காக 12 மில்லியன் ரூபாவை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைப்பதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில், ஒரு ஹெக்ரேயரில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச அங்கீகாரம் பெற்ற உர நிறுவனங்களால் 9 ஆயிரம் ரூபாவிற்கு வழங்கப்படும் யூரியா உரத்தில் எந்தவித விலை மாற்றமும் ஏற்படுத்தாமல் இருக்க தனியார் நிறுவனங்களும் இணங்கியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# இரண்டு பேர் சுட்டுக்கொலை! அவிசாவளையில் பயங்கரம்!!

கொழும்பு, செப். 22

அவிசாவளை இஹல தல்துவ, குருபஸ்கொட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நால்வர் மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் அவிசாவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் தல்துவ பகுதியைச் சேர்ந்த 27, 36 வயதான இருவரே உயிரிழந்துள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டிற்கு ரி-56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

தப்பியோடிய சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பயணப் பொதியில் சடலம் சந்தேகநபர்களுக்கு மறியல்

கொழும்பு, செப். 22

ஜப்பானுக்கு அனுப்புவதாக கூறி 24 இலட்சம் ரூபாவை மோசடி செய்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரைக் கடத்திச் சென்று கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட ஆறு சந்தேகநபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன் தினம் நீர்கொழும்பு பிரதான நீதவான் அமில ஆரியசேன முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டனர்.

இதன்போது, சந்தேகநபர்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கொலை செய்யப்பட்டவரின் சடலத்தை சீதுவ தண்டுகம ஓயா பகுதியில் பயணப் பையில் வைத்து வீசிச் சென்ற சம்பவம் தொடர்பில் குறித்த ஆறு பேரும் கைது செய்யப்பட்டனர். (அ)

# இந்தியாவிடம் இருந்து மிகவிரைவில் இலங்கைக்கு 10 ரயில் இயந்திரங்கள்

கொழும்பு, செப். 22

இலங்கைக்கு 10 ரயில் இயந்திரங்களை வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது.

கடனுதவியின் அடிப்படையில் இந்த ரயில் இயந்திரங்கள் இலங்கைக்கு கிடைப்பதாக ரயில்வே பொது முகாமையாளர் குணசிங்க தெரிவித்தார்.

அவற்றை கொண்டுவருவதற்கு முன்னர் அவற்றின் தரங்களை ஆராய்வதற்காக ரயில்வே துறை அதிகாரிகள் குழுவொன்று இந்தியாவுக்கு செல்வதாக அவர் கூறினார்.

இயந்திரங்கள் இல்லாமையால் ரயில் போக்குவரத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

பழைய ரயில் இயந்திரங்கள் பழுதுபார்க்கப்பட்டு சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள போதிலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் அவற்றில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறினால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# முத்துஹெட்டிகமவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, செப். 22

காலி பிரதான நீதவான் உத்தரவின் பேரில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜீப் வண்டி ஒன்றை சட்டவிரோதமாக இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று காலி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே பிரதான நீதவானால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காலி - கராப்பிட்டிய பிரதேசத்தில் பொலிஸாரால் முன்னாள் அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகமவுக்கு சொந்தமானது என கூறப்படும், வரியின்றி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு ஜீப் கடந்த ஆண்டு கைப்பற்றப்பட்டது.

சொகுசு ஜீப்புடன் கைது செய்யப்பட்ட நபர் இந்த சம்பவம் தொடர்பான விசாரணையில், இது தனது வாகனம் அல்ல எனவும் முன்னாள் அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகமவுக்கு சொந்தமான வாகனம் எனவும் கூறினார்.

அதன் பின்னர் நிஷாந்த முத்துஹெட்டிகமவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த பின்புலத்திலேயே அவர் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் ஒருவர் மன்னாரில் வைத்து கைது!

மன்னார், செப். 22

மன்னார் - உயிலங்குளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த சிகரெட்டுக்கள் 5 இலட்சம் ரூபா பெறுமதியுடையவை என குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சிகரெட்டுக்களை கொழும்பிலிருந்து மன்னார் நோக்கி பயணித்த பேருந்தொன்றில் கடத்தியபோதே அவர் கைதானார்.

கைதானவரிடமிருந்து இரண்டாயிரத்து 900 சிகரெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில் 25 வயதுடைய ஒருவர் மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# டிஜிற்றல் பொருளாதாரத்தை கையில் எடுக்கும் இலங்கை!

## 2030இல் 15 பில்லியன் டொலர்களை ஈட்டுவது இலக்கு

கொழும்பு, செப். 22

டிஜிற்றல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 15 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப தொழில்துறை சம்மேளனத்தின் பொருளாளர் இந்திக டி சொய்சா தெரிவித்தார்.

“தேசிய தகவல் தொழில்நுட்ப மாநாடு - 2023” குறித்து ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலைபேறான டிஜிற்றல் சமூகத்தை நோக்கி” என்ற அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நகரும் டிஜிஎக்கொன் 2030 வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்தை விரைவுபடுத்துவதற்கு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும்.

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தின் வழிகாட்டலின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இந்நாட்டில் தொழில்நுட்பத்தை வலுவூட்டுவது குறித்து முன்னுரிமை வழங்கியதற்காக அரசாங்கத்திற்கு பாராட்டுகின்றேன்.

இன்று அனைவரும் டிஜிற்றல் பொருளாதாரம் பற்றி பேசுகிறார்கள். உலகின் முன்னேறிய நாடுகள் டிஜிற்றல் பொருளாதாரம் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வழங்கப்படும் பங்களிப்பு சுமார் 40 வீதமாகும். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் 20 வீத பங்களிப்பு வழங்கப்படுகிறது. எமது நாட்டில் டிஜிற்றல் பொருளாதாரத்தின் மூலம் தற்போது வழங்கப்படும் 5 வீத பங்களிப்பை 20 வீத ஆக உயர்த்தும் இயலுமை எம்மிடம் உள்ளது.

மேலும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தற்போது வழங்கப்படும் பங்களிப்பான 3.7 பில்லியன் அமெரிக்க டொலர்களை 2030 ஆம் ஆண்டிற்குள் 15 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.




டிஜிஎக்கொன் 2030 அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக அடுத்த 07 ஆண்டுகளுக்கான வழிகாட்டுதல் தொகுப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. டிஜிற்றல் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதன் மூலம் இலங்கை மக்களின் தொழிநுட்ப அறிவை மேம்படுத்துவதில் இன்று ஒரு செயலூக்கப் பங்களிப்பின் தேவை உள்ளது.

2030 ஆண்டுக்குள் டிஜிற்றல் பொருளாதார பிரதான திட்டம் மற்றும் கண்காணிப்புக் கொள்கைக் கட்டமைப்பை வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் டிஜிற்றல் பொருளாதாரத்தை விரைவுபடுத்த இது ஒரு முக்கிய காரணியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த ஆண்டு மாநாட்டில் ஆறு முக்கிய நோக்கங்களுடன், முப்பதுக்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச பேச்சாளர்கள் விரிவுரைகளை வழங்க உள்ளனர். நிதித் தொழில்நுட்பம், கல்வித் தொழில்நுட்பம், சுற்றுலாத் தொழில்நுட்பம், தகவல் பாதுகாப்பு, விவசாயத் தொழில்நுட்பம், இலத்திரனியல் சுகாதார சேவைகள் ஆகிய ஆறு தலைப்புகளில் இந்த மாநாட்டை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வுடன் இணைந்து, நாட்டில் உள்ள சிறந்த கணனி வல்லுநர்களுக்கு பரிசுகள் வழங்கவும், கணனித் துறையில் சிறந்து விளங்குபவர்களை பாராட்டவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு மாநாட்டின் தனித்துவமான வேலைத்திட்டமாக டிஜிற்றல் முதலீட்டு மாநாட்டை குறிப்பிடலாம். நாட்டில் உள்ள அனுபவமிக்க தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு சாத்தியமான முதலீட்டாளர்களை அடையாளம் காண்பதையும் தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியில் 03 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற இலக்கை அடைவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கு, இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப முகவர் நிறுவனம் வழங்கிய ஆதரவைப் பாராட்ட வேண்டும்-என்றார். (அ)

# அணு ஆயுதங்களை தடை செய்வதற்கான உடன்படிக்கையில் இணைந்தது இலங்கை

நியூயோர்க், செப். 22

நியூயோர்க்கில் உள்ள ஐநா தலைமையகத்தில் நடைபெற்று வரும் ஐ.நா பொது சபைக் கூட்டத்தில் இலங்கை அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

இதன்படி, அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட 69வது நாடாக இலங்கை பதிவாகியுள்ளது.

ஐ.நா பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட சட்ட ஆவணத்தை கடந்த சில மாதங்களாக மேற்கொண்டு வந்தது.



2017 ஜூலை 07 அன்று நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையில் இலங்கை பங்கேற்றது. மேலும் அதை ஏற்றுக்கொள்வதற்கு ஆதரவாக வாக்களித்த 122 நாடுகளிலும் உள்ளடங்கும்.

2016 ஆம் ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற திறந்தநிலை பணிக்குழு செயல்முறையில் பங்கேற்பதன் மூலம் ஒப்பந்த பேச்சுவார்த்தை செயல்முறைக்கு வழிவகுத்தது. (அ)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைகளை மூடிமறைக்க செயல்பட்டார் கோட்டா!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 22

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவிக்கு வந்த பின்னர் தனது முதல் பணியாக ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மூடிமறைக்கும் நடவடிக்கைகளை எடுத்தார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சனல் 4 தொலைக்காட்சியின் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஆவணப்படம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தலதா மாளிகை மீது குண்டு தாக்குதல் நடத்தியவர்கள், ஜோசப் பரராசிங்கத்தை கொலை செய்தவர்கள், திரிபொலி இராணுவ முகாமை வைத்துக்கொண்டு லசந்த விக்ரமதுங்கவை கொலை செய்தவர்கள் சபையில் நாங்கள் உரையாட இடமளிக்காமல் தடுக்கின்றனர்.

மண்ணெண்ணெயை வீசும் போது சாரை பாம்புகளுக்கு தாங்க முடியவில்லை. அப்படியான நிலைமைதான் ஏற்பட்டுள்ளது. அவை அனைத்தும் ஒரே திட்டத்தின் நடவடிக்கைகள்.

2015 ஆம் ஆண்டு முதல் ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் பிள்ளையான் என்ற கொலையாளி சிறையில் இருந்தார்.

அந்த சந்தர்ப்பத்திலேயே காத்தான்குடியில் நடைபெற்ற சம்பவம் ஒன்று தொடர்பாக சஹ்ரானின் ஆட்களும் சிறைக்கு சென்றனர்.

ஆசாத் மௌலானா கூறுவது போல் இவர்கள் இரண்டு தரப்பினரும் சிறைக்குள் இணைந்து திட்டங்களை வகுத்தனர். வண்ணாத்துவில்லுவில் அவர்களை சாலேயுக்கு அறிமுகம் செய்து சதித்திட்டங்களை உருவாக்கினர்.

இவை அனைத்தும் ஆட்சி அதிகாரத்திற்காக செய்யப்பட்ட சூழ்ச்சிகள். நாங்கள் 52 நாள் சூழ்ச்சியை பார்த்தோம். அந்த சூழ்ச்சி நீதிமன்றத்தில் தோல்வியடைந்தது.

அந்த சூழ்ச்சி தோல்வியடைந்த பின்னர் இவர்கள் திட்டம் பீ. நடைமுறைப்படுத்த வேகமான செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

52 நாள் சூழ்ச்சி தோல்வியடைந்து, ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவிப்பிரணம் செய்த பின்னர் திட்டம் பீ ஆரம்பமாகின்றது.

மாவனெல்லையில் புத்தர் சிலை உடைக்கப்படுகின்றது. வண்ணாத்துவில்லு பிரதேசத்தில் ஒன்றுக்கூடுகின்றனர்.

சஹ்ரானின் மனைவி ஹாதியா தெளிவான சாட்சியங்களை வழங்கியுள்ளார்.

அவர் ஹபுஹிம் என்ற நபர் பற்றி கூறியுள்ளார். ஹபுஹிம் என்ற நபர் அடிக்கடி இந்தியாவில் இருந்து தொடர்பு கொண்டுள்ளார்.

அவருடன் உரையாடும் போது அருகில் இருப்பவர்கள் வெளியேற்றபட்டனர் என ஹாதியா தெரிவித்துள்ளார்.

ஹபுஹிம் என்ற நபரே இந்த தாக்குதலை துரிதப்படுத்துமாறு கூறியதாக ஹாதியா கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் தெரிவுக் குழுவிற்கு வந்த பொலிஸ் அதிகாரிகள் ஹபுஹிம் என்பது மாயை என கூறியுள்ளனர். இது குறித்து வெட்கப்படுகின்றோம்.

இரண்டு முக்கியமான வாக்கு மூலங்கள் உள்ள அதில் ஒன்று ஹாதியாவின் வாக்குமூலம்.

ஹபுஹிம் என்பது மயையை அல்ல, அவரே இந்தியாவில் இருந்தவாறு இதனை நெறிப்படுத்தியுள்ளார்.

இதனால் ஹபுஹிம் யார் என்று தேடாத விசாரணை குழுக்கள் பற்றி பேசி பயனில்லை.

ஹபுஹிம் யார் என்பதை கண்டறியும் விசாரணை நடத்தப்படாதமை காரணமாக அந்த நபரே பிரதான சூத்திரதாரி.

இந்த விசாரணைகளை மூடிமறைக்கவே கோட்டாபய ஜனாதிபதியாக பதவிக்கு வந்த உடன் தனது முதல் பணியாக விசாரணைகளை நடத்திய ஷானி அபேசேகரவை இடமாற்றம் செய்தார்.

ஷானி அபேசேகர உட்பட சி.ஐ.டியினர் விசாரணைகளை நடத்தி 100 இற்கும் மேற்பட்டோரிடம் வாக்குமூலங்களை பெற்றிருந்தனர்.

அதனை நிறுத்தவே ஷானி அபேசேகரவை கோட்டாபய பதவியில் இருந்து அப்புறப்படுத்தினார்.

இதனையடுத்து தேசிய புலனாய்வுச் சேவையின் பணிப்பாளராக சுரேஷ் சாலேயை நியமித்தார்-என்றார். (அ)

# 13 வயது சிறுவனைக் கொடூரமாக துஷ்பிரயோகம் செய்த பிக்கு கைது!

கொழும்பு, செப். 22

13 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த பிக்கு ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர் போகஸ்வெவ பிரதேசத்தில் உள்ள ரஜமஹா விகாரை ஒன்றில் வாழ்ந்து வரும் பிக்கு எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபரான பிக்கு விகாரையில் வசிக்கும் சிறுவன் ஒருவரை கொடூரமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு தகவல் கிடைத்துள்ளது.

குறித்த தகவல் தொடர்பில் விசாரணை நடத்துமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை எஹெட்டுவெவ பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி, எஹெட்டுவெவ பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், சந்தேகநபரான பிக்கு கைது செய்யப்பட்டார்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவன் மருத்துவ பரிசோதனைக்காக குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# நான் ஒரு நூல் துண்டைக்கூட திருடவில்லை பொறுப்பின்றி அறிக்கை விடும் ஊடகங்கள்

## சபையில் அமைச்சர் பந்துல ஆதங்கம்

கொழும்பு, செப். 22

**பாராளுமன்றத்தில் உள்ளவர்கள் அனைவரும் திருடர்கள், மோசடிக்காரர்கள், ஊழல்வாதிகள் என இலங்கையிலுள்ள ஊடகங்கள் எவ்வித பொறுப்பும் இன்றியும் சாட்சியங்களும் இன்றி அறிக்கை விடுகின்றன என வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் 1989 மக்கள் ஐக்கிய பெரமுன ஊடாக பாராளுமன்றுக்கு தெரிவு செய்து நாடாளுமன்றின் பெயருக்கும் நாட்டின் பெயருக்கும் கௌரவத்தினை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் வகையில் உள்ள அமைச்சர்.

ஒரு நூல் துண்டையாவது திருடாத நான், ஐம்பது சதமாவது நான் மோசடி செய்திருந்தால் அதனை நிரூபிக்குமாறு நான் இந்த நாடாளுமன்றுக்கு உள்ளேயும் சரி வெளியேயும் சரி அடிக்கடி கூறியுள்ளேன்.

எனது பிள்ளைகள் இந்த நாட்டில் அரசியல் செய்வதில்லை. நான் மட்டும் தான் இறுதியாக அரசியலில் உள்ளவன். இதனை நிரூபிக்கும் பட்சத்தில் அவர்கள் பாராளுமன்றத்தில் மட்டுமன்றி என்றைக்கும் அரசியல் செயற்பாட்டில் இருந்து நீக்கப்படுவார்கள் என்பதனை அறிந்து ஊடக நிறுவனங்கள் தொடர்ந்தும் செயற்படுவது வருத்தமளிக்கின்றது -என்றார். (அ)

# சில்லறைத்தனமாக செயல்பட வேண்டாம்

## கஜேந்திரன் எம்.பிக்கு மொட்டு எச்சரிக்கை

கொழும்பு, செப் . 22

அரசியலுக்காக சில்லறைத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுவதை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது பொதுஜன பெரமுன கட்சி.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன மேலும் கூறியவை வருமாறு:

வடக்கு, கிழக்கில் உள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் இனவாதத்தைத் தூண்டி நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முற்படுகின்றனர். திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகூட இதன்ஓர் அங்கம்தான்.

திலீபன் நினைவேந்தலுக்காக வாகன பேரணியை நடத்தி நாட்டில் பெரும் குழப்பத்தை தோற்றுவித்துள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன். மஹிந்தவின் புண்ணியத்தால் நாட்டில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. யார் வேண்டுமானாலும் எங்கும் பயணிக்கக்கூடிய அமைதி நிலவுகின்றது. எனவே, பாலில் சாணத்தை கலக்கும் வகையிலான செயலை அவர் செய்துள்ளார். அரசியலுக்காக சில்லறைத்தனமான செயல்களில் ஈடுபடுவதை கஜேந்திரன் நிறுத்த வேண்டும்-என்றார். (அ)

# ஓய்வு பெற்ற பெண் இராணுவ சிப்பாயை டுபாயில் விபசாரத்தில் ஈடுபடுத்த முயற்சி!

## மனித கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடைய பெண் ஒருவர் கைது!

கொழும்பு, செப். 22

இலங்கை மற்றும் டுபாய் ஆகிய நாடுகளுக்கிடையில் செயற்படும் மனித கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடைய பெண் ஒருவர் தம்புத்தேகமவில் வைத்து ஆட்கடத்தல் மற்றும் கடத்தல் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் கடந்த 2022 ஆம் ஆண்டு அனுராதபுரத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பெண் இராணுவ வீராங்கனையை சுற்றுலா விஸாவில் டுபாய்க்கு அனுப்பி அங்கு அவரை விபசார தொழிலில் ஈடுபடுத்த முயன்றுள்ளார்.

ஓய்வுபெற்ற பெண் இராணுவ சிப்பாய் டுபாயில் இருந்த காலத்தில் இரண்டு முறை அங்குள்ள விபசார விடுதிக்கு செல்ல வற்புறுத்தப்பட்டபோது அவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

அத்துடன் தான் அங்கிருந்து இலங்கை திரும்புவதற்கு வேலை வாய்ப்பு நிறுவனமே பொறுப்பு என்றும் பாதிக்கப்பட்ட ஓய்வு பெற்ற பெண் இராணுவ சிப்பாய் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், பயணத்திற்காக செலவழிக்கப்பட்ட ஆரம்பத் தொகையான 5 இலட்சம் ரூபாவுக்கு கூடுதலாக 4 இலட்சம் ரூபாவைச் செலுத்தியுள்ளதாக பாதிக்கப்பட்ட பெண் இராணுவ சிப்பாய் பொலிஸ் மா அதிபருக்கு சம்பவம் குறித்து இராணுவ அதிகாரி மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், சந்தேகநபர் தம்புத்தேகமவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் டுபாயிலுள்ள அவரது சகாவை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# நாட்டின் வங்குரோத்துக்கு ஜனாதிபதியாக இருந்த எதிர்க்கட்சித் தலைவரின் தந்தையுமே பொறுப்பு

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்

கொழும்பு, செப். 22

நாட்டின் தற்போதைய வங்குரோத்து நிலைக்கு ஜனாதிபதியாக பணியாற்றிய எதிர்க்கட்சித் தலைவரின் தந்தையும் காரணம் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வங்குரோத்து நிலைக்கு எதிர்க்கட்சிகளே பெரிதும் காரணம் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது, அங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கருத்துக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவருக்கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுக்கும் இடையில் சர்ச்சை நிலை ஏற்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ - நாட்டில் நிதிப் பிரச்சினை ஏற்படும் போது ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபைக்கு செல்லும் போது நாட்டை வங்குரோத்து செய்த பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கு செல்கின்றனர். என்ன ஒரு நகைச்சுவை. அதிகாரிகள் குழுவோடு ஜனாதிபதி சென்றால் எனக்கு பிரச்னை இல்லை.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க- சபாநாயகரே, தினமும் காலையில் வந்து இந்தப் பிரச்னைகளை முன்வைக்கிறார். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஈஸ்டர் தாக்குதல் குறித்து பேசியதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நீங்கள் கேட்கும் போதெல்லாம் நிதிச் சிக்கல்களைப் பற்றி பேச உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. அவர்களைப் பற்றி தனித்தனியாகப் பேசும்போது நிகழ்ச்சி நிரலின்படி செயல்பட முடியாது. எனவே, பாராளுமன்ற நிகழ்ச்சி நிரல் மீது உங்கள் கவனம் செலுத்துங்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ - நாட்டை வங்குரோத்து நிலைக்கு உள்ளாக்கிய மொட்டுக் குழுவும் ஐ.நாவுக்கு சென்றிருக்கிறார்கள். தங்கள் அணியை உற்சாகப்படுத்த கூட்டிக் கொண்டு போயுள்ளார்கள்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க-அவரது தந்தையும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக நாட்டை வங்குரோத்து நிலைக்குச் செல்ல உழைத்தவர். அவர் அமைச்சராகவும் பல ஆண்டுகள் பணியாற்றினார். மொட்டுக் கட்சி அண்மையில் உருவாக்கப்பட்டது. அவர்கள் அதிக பொறுப்புடன் இருக்க வேண்டும். அதிகாலையில் வந்து பைத்தியம் ஆட வேண்டாம் என்று சொல்லுங்கள் சபாநாயகரே-என்றார். (அ)

# அனுரகுமாரவுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிப்பு!

கொழும்பு, செப். 22

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர திஸாநாயக்கவின் பிரபல்யம் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளதாக சுகாதார கொள்கைக்கான நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு மக்கள் மத்தியில் காணப்படும் செல்வாக்கு சற்று வீழ்ச்சியடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, சஜித் பிரேமதாஸவின் மக்கள் பிரபல்யம் மேலும் வீழ்ச்சியடைந்து எதிர்மறை 58 (-58) புள்ளிகளாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நிறுவனம் நடத்திய முந்தைய கணக்கெடுப்பில் இருந்து அனுர திஸாநாயக்கவின் மக்கள் செல்வாக்கு மதிப்பு 16 புள்ளிகள் அதிகரித்து எதிர்மறை 28 (-28) ஆக பதிவாகியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மக்கள் செல்வாக்கு எதிர்மறை 46 (-46) ஆகவும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மக்கள் எதிர்மறை 78 (-78)ஆகவும் உள்ளது.

பொதுவாக அனைத்து தலைவர்களினதும் மக்கள் செல்வாக்கு எதிர்மறையாக இருக்கின்றது.

எதிர்மறை மதிப்பெண்கள், அதாவது, பூச்சியத்திற்கும் குறைவான நிகர சாதக மதிப்பீடு, தனிநபர் அல்லது நிறுவனத்தை பிரபலமற்றது என்று அர்த்தப்படுத்துகின்றது.

இந்த ஆய்வினை மேற்கொண்ட சுகாதார கொள்கைக்கான நிறுவகம் என்பது இலங்கையின் கொழும்பில் அமைந்துள்ள ஒரு சுயாதீனமான, பாரபட்சமற்ற ஆராய்ச்சி மையமாகும். (அ)

# கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர் அடுத்த மாதத்தில் இணைக்கப்படுவர்

கொழும்பு, செப். 22

கல்வியியல் கல்லூரிகளுக்கு 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை ஒக்ரோபர் மாதத்தில் இணைத்துக்கொள்ள இருக்கிறோம். அதேபோன்று 2021ஆம் ஆண்டு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் வர்த்தமானி அறிவிப்பு ஓர் இரு வாரங்களில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ரோஹினி குமாரி கவிரத்ன கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது ரோஹினி குமாரி கவிரத்ன மேலும் தெரிவிக்கையில்-

2019, 20ஆம் ஆண்டுக்காக கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரியர் பயிற்சிக்காக இது வரை மாணவர்கள் இணைத்துக் கொள் ளப்படவில்லை.

அவர்களின் பெயர்கள் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று 2021ஆம் ஆண்டுக்கு கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் வர்த்தமானி அறிவிப்பு இது வரை வெளியிடப்படாமல் இருக்கிறது. 4 வருடங்களாக மாணவர்கள் பரீட்சை எழுதி விட்டு பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

அத்துடன் கல்வியியல் கல்லூரிகளில் தற்போது ஒரே ஒரு ஆண்டு மாணவர்களே பயிற்சி பெற்று வருகின்றனர். அடுத்த வருடம் பயிற்சி பெற்று வெளியேற ஆசிரியர்கள் இல்லை. மீண்டும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வெளியேற இருப்பது 2025 ஆகும். அதனால் 2019, 20, 21ஆம் ஆண்டு மாணவர்களை கல்வியியல் கல்லூரிகளுக்கு விரைவாக இணைத்துக் கொள்ள முடியாமல் போனால் மீண்டும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 2029ஆம் ஆண்டிலேயே வெளியேறுவார்கள். அதனால் இது தொடர்பாக எடுக்கவிருக்கும் நடவடிக்கை என்ன என கேட்கிறோம்-என்றார்.

இதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

2019, 20ஆம் ஆண்டுகளில் கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவாகி இருக்கும் 1400 மாணவர்களின் பெயர்கள் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களை 19 கல்வியியல் கல்லூரிகளுக்கு பிரிக்கப்பட்டி ருக்கிறோம். 2ஆம் ஆண்டு மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீடு முடிவடைந்து தற்போது மேற்பார்வை இடம் பெற்று வருகிறது.

இந்த நடவடிக்கை முடிவடைந்ததுடன் அடுத்த மாதம் ஆரம்பத்தில் இந்த மாணவர்கள் அனைவரையும் 19 பீடங்களுக்கும் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறோம்-என்றார். (அ)

# நாட்டின் கல்வி முறைமை துரதிர்ஷ்டவசமாக நல்ல தலைவர்களை உருவாக்க தவறிவிட்டது!

## கல்முனை பற்றிமா அதிபர் ரெஜினோல்ட்

காரைதீவு, செப். 22

**“துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டில்உள்ள கல்வி முறைமை நாட்டுக்கு தேவையான நல்ல தலைமைத்துவங்களை உருவாக்கத் தவறிவிட்டது. அதனை சீர் செய்ய வேண்டியது ஆசிரியருடைய கடமையாகும்.”**

-இவ்வாறு கல்முனையில் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான இருநாள் பயிற்சி பட்டறையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர் றெஜினோல்ட் தெரிவித்தார் .

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்துடன் இணைந்து அக்சன் யூனிட்டி லங்கா அமைப்பு அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை சம்மாந்துறை அக்கரைப்பற்று திருக்கோயில் ஆகிய கல்வி வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது ஆரம்பநெறி ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் கற்பித்தல் அணுகுமுறை செயலமர்வை நடத்தியது.

ஏயூ லங்கா நிறுவன பிரதம நிறைவேற்று அலுவலர் கே. கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த செயலர்வின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று வியாழக்கிழமை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் நடைபெற்றது.

கூட்டத்தில் சம்மாந்துறை வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் வீ.ரி.சகாதேவராஜா, பிரதி அதிபர் பா. சந்திரேஸ்வரன் ஆகியோர் சிறப்பதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

கௌரவதிகளாக எயூ லங்கா நிறுவனத்தின் கல்வி இணைப்பாளர் கே.சதீஸ்குமார் திட்ட முகாமையாளர் வி.சுதர்சன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

ஆசிரியர்கள் தங்களது அறிவை இற்றைப் படுத்திக் கோள்ள வேண்டும். தொடர்ச்சியாக கற்கின்ற ஆசிரியரே சிறந்த ஆசிரியர் .

ஒரு ஆசிரியனுக்கு கிடைக்க கூடிய பெரிய அதிசயம் என்னவென்றால் அவன் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளின் உள்ளத்தை தொட வேண்டும் .அதுவே அவனது மிகப் பெரிய அதிசயமாகும். மேலும் பாடசாலைகளிலே தலைமைத்




துவம் உருவாக வேண்டும்-என்றார்.

கல்முனை சம்மாந்துறை அக்கரைப்பற்று திருக்கோயில் ஆகிய வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 50 ஆரம்பநெறி ஆசிரியர்கள் இரண்டு நாள் கற்பித்தல் கற்றல் அணுகுமுறை செயலமர்வில் பங்கு பற்றுகின்றனர்.

(அ)

# தமிழ் மக்களுக்கான நீதியை இலங்கை அரசு தரமாட்டாது!




காரைதீவு, செப். 22

“இலங்கை அரசு இன்னமும் தமிழருக்கான நீதியை தரும் என்று எதிர்பார்க்க முடியாது. அதனால் தர முடியாது .தரவும் மாட்டாது . எனவே ஐநா சபை இந்த நீதியை பெற்றுத் தர வேண்டும்.”

-இவ்வாறு நேற்று வியாழக்கிழமை அம்பாறை மாவட்ட வளத்தாப்பிட்டியில் இடம் பெற்ற மக்கள் போராட்டத்தில் பேசிய தமிழரசுட்சி முக்கியஸ்தரும் முன்னாள் காரைதீவு தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அறைகூவல் விடுத்தார்.

வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் அதன் இணைப்பாளர் காத்தவராயன் காந்தன் தலைமையில் இடம் பெற்ற மக்கள் போராட்டம் நேற்று வியாழக்கிழமை வளத்தாப்பிட்டியில் இடம்பெற்றது.

நூற்றுக்கணக்கான பொது மக்கள் பதாகைகள் சகிதம் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

அங்கு ஜெயசிறில் மேலும் பேசுகையில்-

நீதி தேவதை கண் திறக்க வேண்டும். ஐக்கிய நாடு சபை இந்த போர்க் குற்றவாளிகளை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். பாட்டில் தமிழர்களின் வரலாற்று அடையாளங்கள் படிப்படியாக அழிக்கப் படுகின்றன. தமிழர் பிரதேசங்கள் தொல்லியல் என்ற போர்வையில் நில ஆக்கிரமிப்பு செய்யப்படுகின்றது. காணாமல் ஆக்கப்பட்டதற்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. மனித உரிமை மீறப்படுகின்றது. இது எல்லாம் நீதிக்கு உட்படுத்தப் பட வேண்டும் . மொத்தத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப் பட்ட தமிழர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும்-என்றார்.

(அ)

# சிரேஷ்ட,கனிஷ்ட பிரிவில் வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு



அம்பாறை, செப். 22

கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட பிரதீபா - 2023 போட்டிகளில் சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவில் முதலிடம், இரண்டாமிடம் பெற்ற சாய்ந்தமருது கலாசார மத்திய நிலைய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன் கிழமை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம் பெற்றது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம்.தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீஸ்வரன் பிரதம அதிதியாகவும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

பிரதீபா போட்டியில் வெற்றி பெற்ற இச்சாதனையானது சாய்ந்தமருது வரலாற்றில் பாரியதொரு வெற்றியாகும். ஏனெனில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் திறந்து எட்டு மாத காலப்பகுதியில் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த மத்திய நிலையங்களை வீழ்த்தி இவ்வெற்றிச் சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

(அ)

# விவசாயிகளுக்கு உபகரணங்கள் உயர் ரக விதைகள் விநியோகம்

மட்டக்களப்பு, செப். 22

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலக பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்காக விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விவசாய உபகரணங்கள் மற்றும் உயர் ரக பயற்றை உற்பத்திக்கான விதைகளை வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாவட்ட செயலாளர் கலாமதி பத்மராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்த நிகழ்வில், ஒரு தொகுதி விவசாய உபகரணங்கள் மற்றும் உயர் ரக பயற்றை உற்பத்திக்கான விதைகள் என்பன விநியோகிக்கப்பட்டன.

இதன்போது பிரதேச செயலகத்தின் சகல கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 77 பயனாளிகளிடம் புசிட்டாவோ இன முளை திறன் பயற்றை உற்பத்திக்கான ஒரு கிலோ எடை விதைகளும், நீர்க் குழாய்களும் பகிர்ந்தளிக்கப் பட்டன.



இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன், தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ். சித்திரவேல், மாவட்ட விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் ரி. தனிநாயகம், விவசாய போதனாசிரியர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# தேசிய மட்ட மல்யுத்தப் போட்டியில் தங்கம் வென்ற சிவானந்த பாடசாலை

மட்டக்களப்பு, செப். 22

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் மல்யுத்தப் பிரிவில் மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசலை மாணவர் தங்கப்பதக்கத்தை வென்று பாடசாலைக்கும் மட்டக்களப்பு கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இப்போட்டியில் பங்குபற்றிய பாடசாலை மாணவன் கே. பவிசனே பலத்த போட்டிக்கு மத்தியில் தங்கப் பதக்கத்தை வென்று சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

அதேவேளை குறித்த பிரிவில் எஸ்.டிருஷாந்த், எஸ். டிரோன் ஆகிய இரு மாணவர்களும் வெள்ளிப் பதக்கத்தையும் என்.நிருகாஷ், ஆர்.ருகேஷ்நாத் ஆகிய இருவரும் வெண்கலப் பதக்கத்தையும் வென்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

அதேவேளை குறித்த தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் ரைக்வொண்டோ விளையாட்டு பிரிவில் சிவானந்தா பாடசாலையை சேர்ந்த ஐ.சர்வகன் வெண்கலப் பதக்கத்தையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். (அ)



# இந்தியா - கனடா உறவு மேலும் சிக்கலாகின்றது

**வீசா வழங்குவதை நிறுத்தியது**

புதுடில்லி, செப். 22

**இந்தியா - கனடா நாடுகளுக்கு இடையே தூதரக உறவில் சிக்கல் எழுந்திருக்கும் நிலை யில் கனடா நாட்டில் வீசா வழங்கும் நடைமுறையை அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் நிறுத்தியிருக்கிறது.**

**வீசா வழங்கும் நடவடிக்கையை இந்தியா நிறுத்தியதால், கனடாவிலிருந்து இந்தியாவுக்கு யாரும் வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் தலைவர் கனடாவில் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில், கனடா - இந்தியா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.**

இந்தியாவிலிருந்து கனடா செல்லும் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு மத்திய அரசு நேற்றுமுன்தினம் பயண எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், கனடாவிலிருந்து வருவோருக்கு வீசா வழங்குவதை இந்திய தூதரகம் நேற்று நிறுத்தியிருக்கிறது.

இந்தியாவால் தேடப்பட்டு வந்த காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் (45) கனடாவில் கொல்லப்பட்டமைக்கு இந்திய அரச முகவர்களின் தலையீடு உள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இதைத் தொடர்ந்து, அந்நாட்டில் உள்ள இந்திய தூதரக மூத்த அதிகாரி வெளியேறுமாறும் கனடா அரசு உத்தரவிட்டது.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்த இந்திய அரசு, பதிலடியாக இந்தியாவில் உள்ள கனடா தூதரக உயர் அதிகாரி வெளியேற உத்தரவிட்டது.

இந்த விவகாரம் இரு நாடுகளுக்கு இடையே கடந்த சில மாதங்களாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வந்த நிலையில், தற்போது தீவிரமடைந்துள்ளது. (ஐ)

# காலிஸ்தான் பிரிவினைவாதி கனடாவில் சுட்டுக்கொலை!

ஒன்ராறியோ, செப். 22

கனடாவில் மேலும் ஒரு காலிஸ்தான் பிரிவினைவாதி சுட்டுக் கொலை செய்யப்பட்டார். நேற்று இடம்பெற்ற இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு போலி கடவுச்சீட்டு மூலம் பஞ்சாப்பிலிருந்து தப்பிச் சென்ற காலிஸ்தான் பிரிவினைவாதி சுக்தூல் சிங் கனடாவில் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

இரு கும்பலுக்கு இடையே நடைபெற்ற மோதலில் இவர் கொல்லப்பட்டார் என்று முதல் கட்டத் தகவல் வெளியாகியுள்ளது.



முன்னதாக, இந்தியாவில் இருந்து தப்பித்து கனடாவில் குடிபெயர்ந்த இந்தியாவால் தேடப்படும் காலிஸ்தான் பிரிவினைவாத பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் (45) கடந்த ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த சம்பவத்துக்கு இந்திய அரச முகவர்களின் தலையீடு உள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியதை தொடர்ந்து, இந்தியாவுக்கான தூதரக அதிகாரியை நாட்டைவிட்டு வெளியேற கனடா உத்தரவிட்டது.

இதற்கு பதிலடி தரும் விதமாக டில்லியில் உள்ள கனடா நாட்டு தூதரக அதிகாரியை 5 நாள்களுக்குள் வெளியேற இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் ஆணையிட்டது.

இதற்கிடையே, கனடாவில் வசிக்கும் இந்தியர்கள் குறிப்பாக இந்துக்கள் கனடாவை விட்டு வெளியேற வேண்டும் என்று சீக்கியர்களுக்கான நீதி அமைப்பு எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இந்த சம்பவங்கள் இரு நாட்டு அரசுக்கு இடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்தியிருந்தது. ஏற்கெனவே, கனடாவில் உள்ள இந்தியர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில், இந்த சம்பவம் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# ஈரானில் ஹிஜாப் அணியாத பெண்களுக்கு 10 வருட சிறை

**நிறைவேறியது புதிய சட்டமூலம்**

தெஹ்ரான், செப். 22

ஈரானில் பெண்கள் ஆடைக் கட்டுப்பாட்டை மீறினால் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கும் மசோதா அந்த நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈரானில் பெண்கள் வெளியே செல்லும்போது ஹிஜாப் அணிய வேண்டியது கட்டாயமாக உள்ளது. எனினும் அங்கு ஹிஜாப்புக்கு எதிராக குரல்கள் வலுத்து வருகின்றன.

கடந்த ஆண்டு ஹிஜாப் அணியாத இளம் பெண் ஒருவர் காணாமல் போன நிலையில் பின்னர் பிணமாக மீட்கப்பட்டார். இதையடுத்து அங்கு போராட்டங்கள் வெடித்தன.

இந்நிலையில் ஈரான் அரசு, பெண்களின் ஆடைக் கட்டுப்பாட்டுக்காக ஒரு மசோதாவை நிறைவேற்றியுள்ளது.

இதன்படி, ஈரானில் பொது இடங்களில் பெண்கள் ஹிஜாப் அணியாமல் சென்றால், ஆடைக் கட்டுப்பாட்டை மீறினால் 5 முதல் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும். அத்துடன் அபராதமும் விதிக்கப்படும். (ஐ)

# பிஸ்மில்லா எனக்கூறி பன்றி இறைச்சி உண்ட பெண்ணுக்கு 2 வருடங்கள் சிறை





பாலி, செப். 22

இஸ்லாமியர்கள் சொல்லும் 'பிஸ்மில்லா' என்ற வாக்கியத்தை கூறி பன்றிக்கறி சாப்பிட்டு அதனை காணொலியாக வெளியிட்ட பெண்ணுக்கு இந்தோனேசியாவில் இரண்டு ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவை சேர்ந்தவர் லினா முகர்ஜி (வயது 33). ரிக்ரொக் பிரபலமான இவர் அவ்வப்போது காணொலிகள் வெளியிட்டு வருகிறார். ரிக்ரொக் செயலியில் இவரை ஏராளமானோர் பின் தொடர்ந்து வருகின்றனர். இந்த நிலையில் லினா முகர்ஜியின் ரிக்ரொக் பக்கத்தில் கடந்த மார்ச் மாதம் எடுக்கப்பட்ட காணொலி ஒன்று சமீபத்தில் வைரலானது.

அந்த காணொலியில் லினா முகர்ஜி தனது கையில் பன்றி இறைச்சித் துண்டை வைத்துக் கொண்டிருக்கிறார். சாப்பிடுவதற்கு முன்பு இஸ்லாமியர்கள் சொல்லும் 'பிஸ்மில்லா' என்ற வார்த்தையை சொல்லி அந்த பன்றிக்கறியை லினா முகர்ஜி சாப்பிடுகிறார். 'பிஸ்மில்லா' என்பதற்கு அரபியில் 'இறைவனின் பெயரால்' என்று அர்த்தம். இந்த வார்த்தையை பயன்படுத்தி இஸ்லாம் மதத்தில் தடை செய்யப்பட்ட உணவான பன்றிக்கறியை லினா முகர்ஜி சாப்பிட்ட காணொலி அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பலரும் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக வலைதளங்களில் கோரிக்க விடுத்துவந்தனர்.

இதனையடுத்து இந்தோனேசிய பொலிஸாரால் லினா முகர்ஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பாலேம்பாங் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவருக்கு இரண்டு ஆண்டு சிறை தண்டனையும், 25 கோடி ருபியா (நம் நாட்டு மதிப்பில் சுமார் 54 இலட்சம் ரூபாய்) அபராதமும் விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். பாலி தீவுக்கு சுற்றுலா சென்ற போது ஆர்வத்தில் அப்படி ஒரு காணொலியை எடுத்ததாக லினா நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

# மன்னர் சார்ள்ஸ் தம்பதி பிரான்ஸுக்கு வருகை!

பாரிஸ், செப். 22

பிரிட்டிஷ் மன்னர் சார்ள்ஸ், அரசியார் கமீலா இருவரும் முதலாவது அரசு முறைப் பயணமாக நேற்றுமுன்தினம் பாரிஸ் வந்தடைந்தனர். அவர்கள் இருவரையும் பாரிஸ் ஒர்லி விமான நிலையத்தில் வைத்துப் பிரதமர் எலிசபெத் போர்ன் செங்கம்பளத்தில் வரவேற்றார். மன்னர் தம்பதிகள் அங்கிருந்து பாரிஸ் நகரின் மையத்தில் உள்ள ஆர்க் டி ட்ரியோம்பே வெற்றி வளைவுக்கு வருகை தந்தனர்.

ஜனாதிபதி மக்ரோன் அங்கு வைத்து மன்னர் தம்பதிகளை வரவேற்றார். அங்கு உலகப் போர் வீரர் ஒருவரின் சமாதியும் அணையா விளக்கும் அமைந்துள்ள நினைவிடத்தில் மன்னரும் மக்ரோனும் ஒன்றாக மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். மன்னர் சார்ள்ஸ் அங்கு அணையாமல் ஒளிர்கின்ற விளக்கைத் தூண்டி விட்டார். அச்சமயம் மணி ஒலிக்க விடப்பட்டது.

பின்னர் மன்னர் தம்பதியரும் மக்ரோன் தம்பதியரும் நினைவிடத்தில் படை வீரர்களது அணிவகுப்பை ஏற்றனர்.

பின்னர் அவர்கள் அங்கிருந்து எலிஸே மாளிகைக்குச் சென்றனர். அவர்களது வாகன அணி சென்ற வீதிகளில் இரு புறங்களிலும் காணப்பட்ட மக்கள் "மன்னர் நீடூழி வாழ்க" என்று கோஷம் எழுப்பினர்.

மூன்று நாள் விஜயமாக வருகை தந்துள்ள மன்னர் சார்ள்ஸ், பாரிஸ் சத்தோ து வேர்சாய் அரண்மனையில் நேற்று முன்தினம் முன்னிரவு அதிபர் மக்ரோன் அளித்த அதி உயர் இராப்போசன விருந்துபசாரத்தில் கலந்துகொண்டார்.



# நிதி நெருக்கடி உள்ள நாடுகளுக்கு உதவ முறையான திட்டம் அவசியம்

## ஐ.நாவில் வலியுறுத்தினார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, செப். 22

**நிதி நெருக்கடி காணப்படும் நடுத்தர வருமானம் ஈட்டும் நாடுகளுக்கு உதவுவதற்கான முறையான திட்டம் அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.**

**நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அபிவிருத்திக்கான நிதியுதவி தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடலில் ஆற்றிய சிறப்புரையிலேயே ஜனாதிபதி இதனை வலியுறுத்தினார்.**




“யாரையும் கைவிடாத உலகில் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான நிதியளிப்பு” எனும் தொனிப்பொருளில், நிலையான அபிவிருத்தி இலக்குகள் குறித்த 2023 மாநாட்டுடன் இணைந்தாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த உயர்மட்ட கலந்துரையாடலில் பல நாடுகளின் அரச தலைவர்கள், தனியார் துறை மற்றும் சிவில் சமூகம் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், நிபுணர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

ஒரு பொதுவான கட்டமைப்பு அல்லது செயன்முறை இல்லாததன் விளைவாக நடுத்தர வருமானம் பெறும் நாடுகளின் அவல நிலை குறித்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக கூறுவதாயின், இலங்கை வங்குரோத்து நிலையை அறிவித்த பின்பு அனைத்து வெளிநாட்டு நிதி கொடுக்கல் வாங்கல்களும் நிறுத்தப்பட்டதைக் குறிப்பிடலாம்.

இதன் காரணமாக பாரிய அரசியல் நெருக்கடியை சந்திக்க வேண்டியிருந்தாலும், அமெரிக்க அரசிடமிருந்து கிடைத்த பசளை நன்கொடையால் பல பிரச்னைகளிலிருந்து விடுபட்டு இலங்கை மீண்டும் முன்னேறப் பாதைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறாகப் பார்க்கும் போது, நிதிச் நெருக்கடி காணப்படும் நடுத்தர வருமான நாடுகளுக்கு ஆதரவளிக்க முறையான திட்டம் தேவை என்பதை வலியுறுத்தும் அதேநேரம், இங்கு முன்வைக்கப்பட்ட அனைத்து முன்மொழிவுகளும் தொடர்பிலும் ஆராயப்பட வேண்டும் என்பதோடு, உலகளாவிய பொருளாதார நிலைமை குறித்தும் கவனம் செலுத்தவேண்டும்.

இந்த ஆண்டு, எதிர்பார்க்கப்படும் உலகளாவிய மொத்த தேசிய உற்பத்தி 105 டிரில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது. இதில் 91 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் பொதுக் கடனாகும். எனவே, இந்த அனுமானங்களை மையப்படுத்தியே நாம் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

அதனால் தற்போது எம்மிடத்தில் உள்ள விடயங்களை கொண்டு பயனடைய வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அதன்படி சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 100 பில்லியன் அமெரிக்க டொலர்களை நீடிக்கப்பட்ட கடனாக பெற்றுக்கொள்ளும் இயலுமை உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை பயன்படுத்துவதே இங்கு முக்கியமானதாக காணப்படுகின்றது.

அதனையடுத்து, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு வருடாந்தம் 500 பில்லியன் டொலர்களையும் வழங்குவதாகவும், குறுகிய காலக் கடன்களை குறைந்த வட்டி விகிதத்தில் நீண்ட காலக் கடனாக மாற்றப்பட வேண்டும் எனவும் செயலாளர் நாயகத்தின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்துவதற்கான அவசர வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இலக்குகள் எதிர்காலத்தில் அடைந்துகொள்ள வேண்டியிருப்பதால், செயலாளர் நாயகம் முன்வைத்த யோசனைகளை சாத்தியமாக்குவது தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். அதேசமயம், மேலும் இரண்டு முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்றாக உரம் மற்றும் எரிபொருளுக்கான மானியங்களை விரிவுபடுத்துவது தொடர்பான உலக வங்கியின் முன்மொழிவு மிக முக்கியமான யோசனை யாகும். இதன்போது சேமிக்கப்படும் பணத்தை வேறு தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளும் இயலுமையும் கிட்டும்.

கடன் வழங்குநர்களுக்கு நெருக்கடிகள் இருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதுகுறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் பரிந்துரைக்கிறேன். ஆனால் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும். அந்தச் சலுகைகளை உடனடியாக வழங்காவிட்டால், இந்த முன்மொழிவுகள் பயனற்றதாகிவிடும். எங்களுக்கு பேச்சு மூலமான ஆதரவு கிடைத்துள்ளது. அந்த வார்த்தைகள் எப்போது செயல்படுத்தப்படும் என்று நான் உங்களிடம் கேட்க விரும்புகிறேன்-என்றார். (அ)



# பொதுநலவாய செயலாளரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்

நியூயோர்க், செப். 22

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத் தொடருடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொதுநலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லாண்ட் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நியூயோர்க்கில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இலங்கைக்கும் பொதுநலவாய செயலகத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பு மற்றும் கடந்த வருடம் ருவண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை நிதியளித்தல் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் ஏனைய சவால்கள் குறித்தும் இங்கு உரையாற்றப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பில் பொதுவான நிலைப்பாடொன்றை ஏற்படுத்துவதற்காக பொதுநலவாய நாடுகள் அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தில் இலங்கை முன்னிலை வகிக்கத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புலம்பெயர் சமூகத்துடனான மல்போரா இல்ல கலந்துரையாடலின் முன்னேற்றம் குறித்தும் செயலாளர் நாயகம் ஜனாதிபதிக்கு விளக்கமளித்தார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ் மற்றும் பொதுநலவாய செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

# பொருளாதார மீட்சிக்கு ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு நாணய நிதியம் பாராட்டு



நியூயோர்க், செப். 22

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டத் தொடருடன் இணைந்ததாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுக்கும் இடையிலான சந்திப்பு நியூயோர்க்கில் உள்ள ஐ. நா சபையின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இலங்கையின் நிதித்துறை சீர்த்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

இதன்போது, இலங்கையில் பணவீக்கத்தைக் குறைத்ததுடன், நாட்டில் வர்த்தகத்திற்கு பொருத்தமான சூழலை உருவாக்கியமை மற்றும் சுற்றுலாத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மகிழ்ச்சி தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத் திட்டத்தின் முன்னேற்றத்தையும் அவர் பாராட்டினார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் மஹிந்த சமரசிங்க, ஜனாதிபதியின் ஆலோசகர் தினேஷ் வீரக்கொடி, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர பிரதிநிதி மொஹான் பீரிஸ் உட்பட சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர். (அ)

# மலேசியரின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இங்கிலாந்து சென்ற திருமலை இளைஞன்!

கொழும்பு, செப். 22

இலங்கைக் கடவுச்சீட்டுடன் இலங்கைப் பிரஜையை போல நாட்டுக்குள் பிரவேசிக்க முயன்ற மலேசியப் பிரஜை ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குடிவரவுத் திணைக்களத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

நேற்று முன்தினம் அவர் தடுத்து நிறுத்தப்பட்டு, அவர் வந்த அதே விமானத்தில் மீண்டும் டோஹாவுக்கு நாடு கடத்தியுள்ளனர்.

அவர் 33 வயதான மலேசியர். தரகர் ஒருவரின் வழிகாட்டுதலின் பேரில் கடந்த 10ஆம் திகதி அபுதாபியில் சந்தித்த திருகோணமலையைச் சேர்ந்த 26 வயது தமிழ் இளைஞருக்கு விமான பயணச்சீட்டு மற்றும் கடவுச்சீட்டை வழங்கியுள்ளார்.

அந்த ஆவணங்களைப் பயன்படுத்தி இலங்கை இளைஞர் அன்றைய தினம் இங்கிலாந்துக்குச் சென்றுள்ளார்.

இந்த மலேசியர் இலங்கை இளைஞரிடமிருந்து இலங்கை விமானப் பயணச்சீட்டு, இலங்கைக் கடவுச்சீட்டை பெற்றுள்ளார்.

கொழும்பில் உள்ள மலேசிய தூதரகத்தில் தனது கடவுச்சீட்டு தொலைந்துவிட்டதாக முறையிட்டு புதிய கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நேற்று முன்தினம் டோஹாவிலிருந்து கட்டார் எயார்வேஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர் மொழி பேசுவதில் ஏற்பட்ட சிக்கல் சூழ்நிலையை அடுத்து கைது செய்யப்பட்டார். இதனை அடுத்து இந்த உண்மைகள் அனைத்தும் வெளிப்பட்டன.

இந்த மலேசியரை கைது செய்த கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவுத் திணைக்களத்தினர், அவர் வந்த அதே கட்டார் எயார்வேஸ் விமானத்தில் மீண்டும் டோஹாவுக்கு அழைத்துச் செல்ல விமான நிறுவனத்தினரிடம் ஒப்படைத்தனர். (அ)

### கஜேந்திரன்...

கொண்டுவர தவறி இருந்தனர்.

மற்றும் பாதிக்கப்பட்ட இருவர் திருக்கோணமலை நீதவான் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர். எனினும் அன்று பொலிசார், சந்தேகநபர்களை அடையாள அணி வகுப்புக்கு கொண்டுவர தவறி இருந்தனர். இதனால் அடையாள அணி வகுப்பு நேற்று வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று அடையாள அணிவகுப்பு இடம்பெற இருந்த நிலையில் வாதி தரப்பை சேர்ந்தவர்கள், யாழ்ப்பாணத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் செயற்பாடுகளில் பங்கு கொண்டு இருந்ததமையால், நீதிமன்றத்துக்கு வரவில்லை.

இதனால், வழக்கு எதிர்வரும் 05.10.2023 தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டு இருந்தது.

அத்துடன் வாதி தரப்பை சேர்ந்த நான்கு பேருக்கும் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

இதேவேளை, இந்த வழக்கு தொடர்பில் சீனன்குடா பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட அறிக்கைகள் இடையே முரண்பாடுகள் காணப்பட்டது குறித்து, மேலதிக நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்ஷினியால் பொலிஸாருக்கு கண்டனமும் தெரிவிக்கப்பட்டு இருந்தது. திருக்கோணமலை நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்றுக் காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை நீண்ட நேர இடம்பெற்று இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மதியம் 1.30 மணியளவில் திருக்கோணமலையில் சமாதான சீர்குலைவு இடம்பெறும் எனக்கோரி பொலிஸாரால் குறித்த வழக்கு மீள அதே தினத்தில் விசாரணைக்கு எடுக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. பொலிஸாரின் வேண்டுதலை "சமாதான சீர்குலைவு" என்ற அடிப்படையில் கவனத்தில் எடுத்து, நல்லெண்ண நோக்கில் நீதிபதி மீள மாலை 4.30 மணிக்கு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டார்.

அந்த சந்தர்ப்பத்தில், கைதாகியுள்ளவர்களுக்கு பிணை வழங்கப்பட வேண்டும் என பொலிஸார் கோரினர்.

"திருக்கோணமலையில் நாளை பிக்குகளால் முரண்பாடுகள் தோற்றுவிக்கப்படும்" எனவும், சந்தேகநபர்களை விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கையை முன் வைத்தனர்.

இந்த நிலையில், மாலை 5.00 மணி அளவில் சந்தேகநபர்கள் 6 பேரும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (அ)

### வேறு ஆள்...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தனது வீட்டுக்கு வந்து தான் பிரதமர் பதவியை ஏற்கப் போவதில்லை எனக் கலந்துரையாடியதாகவும் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்ந்து பணியாற்ற சம்மதித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் பிரதமர் பதவியை ஏற்று தன்னுடன் இணைந்து செயற்படுமாறு அழைப்பு விடுத்ததாகவும், ஆனால் அது தனக்கும் பிடிக்கவில்லை எனவும் மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைவர்களிடம் பல தடவைகள் பிரதமர் பதவியை ஏற்குமாறு கோரிக்கை விடுத்தும் அதற்கு அவர்கள் உடன்படாத நிலையிலேயே மஹிந்தவை பிரதமராக நியமிக்க நேரிட்டதாக முன்னாள் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (அ)

# மைத்திரி, கோட்டா சூத்திரதாரிகள்!

கொழும்பு, செப். 22

மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரே உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இரண்டு பிரதான சூத்திரதாரிகள் என முன்னாள் இராணுவத் தளபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதிக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கடும் வாக்குவாதத்தின் போதே சரத் பொன்சேகா இந்த குற்றச்சாட்டை சுமத்தினார்.

முன்னாள் இராணுவத் தளபதியால் தனது இராணுவதலைமையகத்தை கூட பாதுகாக்க முடியவில்லை என மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட கருத்தை தொடர்ந்தே இருவருக்கும் இடையிலான வாக்குவாதம் முற்றியது.

சரத் பொன்சேகா தாக்கப்பட்ட வேளை அவரது உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டன என சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள சரத் பொன்சேகா உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பிரதான சூத்திரதாரிகள் இருவரில் ஒருவர் மைத்திரிபால சிறிசேன என தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கருத்து தெரிவித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது தொடர்ந்தும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதில் இரண்டு தலைமறைவாக உள்ளனர். ஒருவர் அவர். மற்றவர் கோட்டாபய. சன்னி ஒரு நடுவரிசை துட்ப்பாட்ட வீரர் மட்டுமே. முன்னாள் ஜனாதிபதி சிங்கப்பூரில் இருந்தபோது வெடிகுண்டு வெடித்தது. அவர் இலங்கைக்கு வராமல் ஹோட்டலில் பதுங்கியிருந்தார்.

இதுகுறித்து பாராளுமன்றக் குழுவில் கேள்வி எழுப்பினேன். அவர் என்ன சொன்னார்? விமானத்தில் இருக்கைகள் இல்லை என்று கூறினர். பொய் சொல்லி விட்டு இரவில் எல்லோரும் உறங்கிய பின்னர் நாட்டுக்கு வந்திருந்தார்.

இப்படி ஒரு கோழை தலைவன் இதுவரை பார்த்ததில்லை. நாங்கள் மிகவும் வெட்கப்படுகிறோம்-என்றார். (அ)

# எனது மனைவி தமிழ் பெண்!

## சபையில் கூறிய அமைச்சர் பிரசன்ன



கொழும்பு, செப். 22

தனது மனைவி ஒரு தமிழ் பெண் எனவும் 1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரம் நடந்த போது மனைவியை வெளியில் அழைத்துச் செல்ல முடியாத நிலைமை காணப்பட்டதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதி சபாநாயகர் அவர்களே! நான் திருமணம் செய்திருப்பவர் தமிழ் பெண். 83 ஆம் ஜூலை கலவரம் நடந்த காலத்தில் எனது மனைவியை என்னால் வெளியில் அழைத்துச் செல்ல முடியாமல் போனது.

இன, மத பேதங்களை தூண்டி மேற்கொண்டு வரும் மோசமான நடவடிக்கைகளே இதற்கு காரணம். தற்போதும் அதனை இவர்கள் செய்கின்றனர்.

நான் மதியம் சிங்கள அரிசி சோறு சாப்பிடுவதாகவும் இரவில் தோசையும் வடையையும் சாப்பிடுவதாகவும் தேர்தல் காலங்களில் பிரசாரம் செய்தனர்.

எனினும் மூன்று வேளையும் நான் தோசை சாப்பிடுவதாக நான் தேர்தல் மேடைகளில் கூறினேன்.

நான் அரசியலில் ஈடுபடுவது மக்களுக்காகவே அன்றி மனைவிக்காக அல்ல. மிக கேவலமான கதைகளை கூறுகின்றனர்-என்றார். (அ)

### பைடனை...

சிநேகபூர்வமாக வரவேற்றதுடன், இடம்பெற்ற சிறு உரையாடலுக்குப் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் பைடன் தம்பதிகளுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். (அ)

### இலங்கைக்கு...

தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் ஏற்றுமதித் திட்டங்கள், கருங்கடல் தானிய முயற்சிகளுக்கு ஆதரவளித்த அனைத்து தலைவர்களுக்கும் ஜனாதிபதி நன்றி கூறினார்.

"ஒன்றாகச் செயல்பட்டால் இன்னும் பலவற்றைச் சாதிக்கலாம். உலகளாவிய உணவு நெருக்கடியைத் தணிக்க உக்ரைன் மிகவும் உறுதியான நடவடிக்கைகளை முன்மொழிகிறது," என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

### சர்வதேச...

யாழில் நடத்தப்பட்டது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினர் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள ஐ.ஒ.எம் அலுவலகம் முன்பாக நேற்று காலை இப் போராட்டம் நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் இனங்களுக்கு இடையில் மதங்களுக்கு இடையில் நல்லிணக்கம் சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மலேசியா செல்கிறார் ரணில்

கொழும்பு, செப். 22

வலயத்தின் விரிவான பொருளாதார கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற இலங்கைக்கு உதவ மலேசியா தயார் என மலேசிய பிரதமர் அன்வர் பின் இப்ராஹீம் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொது சபையின் 78 ஆவது கூட்டத்தொடர் நியூயோர்க்கில் நடந்துவரும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், மலேசிய பிரதமர் அன்வர் பின் இப்ராஹிமுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இரு நாட்டு தலைவர்களும் இலங்கைக்கும் மலேசியாவுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது குறித்து நீண்ட நேர உரையாடலாக அமைந்திருந்தது.

இலங்கையின் புதிய முதலீட்டு வாய்ப்புகளில் மலேசிய நிறுவனங்கள் ஆர்வம் காட்டுவதாகவும், மலேசியாவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை கைசாத்திடுவதற்கான இலங்கையின் கோரிக்கைக்கு சாதகமான பதிலையும் மலேசிய பிரதமர் வழங்கியிருந்தார்.

மேலும், அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள இந்து சமுத்திர ரிம் கூட்டமைப்பின் பிராந்திய மாநாட்டில் மலேசிய வெளிவிவகார அமைச்சர் பங்கேற்பார் எனவும் பிரதமர் அன்வர் பின் இப்ராஹீம் உறுதியளித்தார்.

இதேவேளை, மலேசியாவிற்கு விஜயம் செய்யுமாறு மலேசிய அரசரின் அழைப்பை மலேசிய பிரதமர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்ததையடுத்து, அடுத்த வருடம் மலேசியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# "மக்களை கொலை செய்துவிட்டு சபைக்கு வரும் அவசியமில்லை"

கொழும்பு, செப். 22

மக்களை கொலை செய்து பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது அமைச்சராகவோ பதவிக்கு வரும் அவசியம் தமக்கில்லை எனவும் அப்படியான முறையில் அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டிய தேவை யில்லை எனவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி ராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மக்களை கொலை செய்து ஆட்சிக்கு வரவேண்டும் என்ற எண்ணம் கொண்ட ஒருவர் பாராளுமன்றத்திற்கு வருவார் என்றால் அப்படியானவர்களுடன் பாராளுமன்றத்தில் அமர தயாரில்லை ஊர் மக்கள் என்னை அரசியலுக்கு தெரிவு செய்ததன் காரணமாகவே நான் அரசியலுக்கு வந்தேன். பௌத்த மக்களும் கத்தோலிக்க மக்களும் என்னை அரசியலுக்கு தெரிவு செய்தனர் எனவும் இந்திக அனுருத்த குறிப்பிட்டுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஈஸ்டர் தாக்குதல் உண்மையை கண்டறிய சர்வதேச விசாரணை!

கொழும்பு, செப். 22

**ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வெளிநாட்டு விசாரணை தேவை என ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான சபை ஒத்திவைப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே நிரோஷன் பெரேரா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உண்மையை வெளிக்கொணர உள்நாட்டு பொறிமுறை போதிய முயற்சிகளை மேற்கொள்ளாததால் வெளிநாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டிய தேவை உள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் ஒரு அரசியல் சதி என்று குற்றம் சாட்டப்பட்டு உள்நாட்டில் பல விசாரணைகள் நடத்தப்பட்டும் எந்த முடிவும் கிடைக்கவில்லை.

கோட்டாபயவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காகவே ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டதாக சர்வதேச ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள காணொலியில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நான்கு வருடங்களுக்கு மேலாகியும் ஈஸ்டர் தாக்குதலுக்கு நேரடியாகப் பொறுப்பான தரப்பினரை அடையாளம் காணவும், தாக்குதலின் நோக்கத்தை வெளிப்படுத்தவும் அரசாங்கம் தவறிவிட்டது.

தொடர் தாக்குதல்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்ட பாதுகாப்புப் படைகளில் தொடர்ந்தும் பதவியில் இருப்பவர்கள் தற்காலிகமாக பதவியில் இருந்து நீக்கப்பட்டு பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் -என்றார். (அ)

# ஏ. எல். பரீட்சை குறித்து அடுத்த வாரம் அறிவிப்பு

### சபையில் கூறினார் கல்வி அமைச்சர்

கொழும்பு, செப். 22

2023 ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர பரீட்சை நடைபெறும் உறுதியான காலப்பகுதி தொடர்பான அறிவித்தல் பரீட்சைகள் திணைக்களத்தால் அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

பரீட்சைக்கு தயாராவதற்கு போதிய கால அவகாசம் இன்மையால் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் பாடசாலை நேர அட்டவணைக்கு பாதகம் ஏற்படாத வகையில் பரீட்சை திகதியை மீளாய்வு செய்யுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மக்கள் பிரதிநிதிகளும் இது தொடர்பில் கோரிக்கை விடுத்திருந்தனர். எனவே, இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு, புதிய திகதி விவரம் அடுத்தவாரம் அறிவிக்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் கூறினார். (அ)

# ஆனைக்கோட்டை பகுதியில் அதிகாலையில் பஸ் தீக்கிரை



யாழ்ப்பாணம், செப். 22

மானிப்பாய் பொலிஸ் பிரிவில், ஆனைக்கோட்டை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று தீக்கிரையாகியுள்ளது.


நேற்று அதிகாலை 3.45 மணியளவில் இந்த சம்பவம் நடந்தது.

ஆனைக்கோட்டை, சாவல்கட்டு பகுதியில் உரிமையாளர் வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதே பஸ் தீப்பிடித்துள்ளது.

இதனையடுத்து அவர் தீயை அணைக்க முற்பட்ட போதிலும் பஸ் முற்றாக தீக்கிரையாகியுள்ளது.

குறித்த பஸ் மின் ஒழுக்கு போன்ற காரணங்களால் தீ பிடித்ததா ? அல்லது விசமிகளின் நாசகார வேலையா? என்பது தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலை முன் வைத்தியர்கள் நேற்றுப் போராட்டம்!



யாழ்ப்பாணம், செப். 22

யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

புத்திஜீவிகள் வெளியேறுவதை தடுப்பதிலும், அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு உள்ள தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்வதிலும், அதிகரித்த வரிச்சுமை, வேதன அதிகரிப்பு, தரமான மருந்துகள் அரச வைத்திய சாலைகளில் இருப்பதை உறுதிப்படுத்துவதிலும் அரசாங்கத்தின் மெத்தனப் போக்கை கண்டித்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் நாடளாவிய ரீதியில் கவனவீர்ப்பு போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இதன் அங்கமாக, யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று வியாழக்கிழமை மதியம் 12 மணி முதல் ஒரு மணி வரையில் போராட்டம் நடைபெற்றது.

இதன்போது தமது கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமெனவும் அது வரையில் தமது போராட்டம் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமெனவும் வைத்திய சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

# ஆசிரியர் மீது தாக்குதல் உயர்தர மாணவன் கைது

மட்டக்களப்பு, செப். 22

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலய ஆசிரியர் மீது நேற்று முன்தினம் இரவு தலைக் கவசத்தால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு மாணவர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டை தீர்த்து வைக்க முற்பட்ட ஆசிரியர் மீதே இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவன் அவரது தந்தை உள்ளிட்ட குழுவினர் இரவு நேர கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆசிரியர் மீது தலைக் கவசத்தால் தாக்கியுள்ளனர்.

இத் தாக்குதலில் தலைப் பகுதியில் பலத்த காயமடைந்த ஆசிரியர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உயர்தர வகுப்பு மாணவன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஆசிரியரை தாக்கிய குழுவினர் தலைமறைவாகியுள்ளனர். (அ)

# வடக்கு - கிழக்கு காணி பிரச்னைக்கு காணி ஆணைக்குழு ஊடாகத் தீர்வு!

## வலியுறுத்துகிறார் அத்துரலிய ரத்ன தேரர்



கொழும்பு, செப். 22

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணிப் பிரச்னைக்கு காணி ஆணைக்குழு ஊடாக தீர்வு காண வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் பல முறை வலியுறுத்தியுள்ளோம். தமிழர் பிரதேசங்களில் நிலவும் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண நடைமுறைக்கு சாத்தியமான எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என பாராளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் எதிரணியின் உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற காடு பேணாற் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மேய்ச்சல் தரை பிரச்னை தீவிரமடைந்துள்ளதால் அப்பிரதேசங்களில் மந்தை மேய்ப்பாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

காணி விடுவிப்பு தொடர்பில் பேச்சில் ஈடுபடும் தரப்பினர் இந்த அடிப்படை பிரச்னை தொடர்பில் அவதானம் செலுத்துவதில்லை.

முறையான மேய்ச்சல் தரை இல்லாத காரணத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான மாடுகள், பசுக்கள் வனவள பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதிகளில் மேய்ச்சலில் ஈடுபடுகின்றன.

சட்ட விரோதமான முறையில் மாடறுப்புக்களும், கால்நடைகள் கொல்லப்படுவதும் சாதாரணமாகவே இடம்பெறுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் மேய்ச்சல் தரை பிரச்னைக்கு தீர்வு காண்பது அத்தியாவசியமானது.

காணி பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு நாங்கள் ஒருபோதும் தடையாக இருக்கவில்லை. காணி ஆணைக்குழு ஊடாக தமிழர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் பல முறை வலியுறுத்தியுள்ளோம்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் காணப்படும் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு நடைமுறைக்கு சாத்தியமான எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. தேவையற்ற விடயங்களுக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கப்படுகிறது-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இந்தியாவுக்கு எதிரான தொடரில் ஆஸியில் முக்கிய வீரர்கள் இல்லை!

சிட்னி, செப். 22

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் முக்கிய வீரர்கள் இல்லாமல் அவுஸ்திரேலிய அணி களம் காண்கிறது.

அவுஸ்திரேலிய அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி நாளை (செப்ரெம்பர் 22) முதல் தொடங்குகிறது. உலகக் கோப்பைக்கு முன்பு நடைபெறும் தொடர் என்பதால் இரு அணிகளுக்கும் முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

இன்று நடைபெறும் முதல் ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணியில் மிட்செல் ஸ்டார்க் மற்றும் கிளென் மக்ஸ்வெல் இடம்பெற மாட்டார்கள் என்பதை அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ஆஸ்திரேலிய அணியின் பட் கம்மின்ஸ் கூறியதாவது:

இந்தியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் மிட்செல் ஸ்டார்க் மற்றும் கிளன் மேக்ஸ்வெல் இடம்பெறமாட்டார்கள். அவர்கள் அடுத்தடுத்த போட்டிகளில் ஆஸ்திரேலிய அணியில் இணைவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. நான் காயத்திலிருந்து குணமடைந்து நலமாக உள்ளேன். 3 போட்டிகளிலும் விளையாடுவேன் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

உலகக் கோப்பை தொடருக்கு முன்னதாக தொடங்கும் தொடர் என்பது ஒருபுறமிருக்க, ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறுவதற்கான தொடராகவும் இந்தியா - அவுஸ்திரேலியா தொடர் பார்க்கப்படுகிறது.

ஐ. சி. சி. ஒருநாள் அணிகளுக்கான தரவரிசையில் தற்போது பாகிஸ்தான் முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பந்துவீச்சு தரவரிசை சிராஜ் முதலிடம்!



டுபாய், செப். 22

ஆசியக் கோப்பை போட்டியில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 6 விக்கெட்டுகளை கைப்பற்றிய தன் மூலம் இந்திய வீரர் முஹம்மது சிராஜ் ஐசிசி பந்துவீச்சு தரவரிசையில் முதலிடத்தை பிடித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) வீரர்க ளுக்கான புதிய தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட்டுள்ளது. இதில் ஒருநாள் போட்டிகளின் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் இந்திய வீரர் சிராஜ் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். கடந்த செப்ரெம்பர் 17ஆம் திகதி ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் 7 ஓவர் களை வீசிய சிராஜ், 21 ஓட்டங் களை மட்டுமே கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தி மிரட்டினார். இதன் மூலம் அவர் தற்போது ஐசிசி ஒருநாள் போட்டிகளுக்கான பந்துவீச்சு தரவரிசையில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரியில் முதலிடத்திலிருந்த சிராஜ், மார்ச் மாதம் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர் ஜோஷ் ஹசில்வுட்டால் பின்னுக்குத் தள்ளப்பட்டார். தற்போது ஆசிய தொடர் மூலம் மீண்டும் முதலிடத்தை தக்கவைத்துள்ளார். இந்த தரவரிசையில் நியூசிலாந்து வீரர் டிரெண்ட் போல்ட் 3-வது இடத்திலும் உள்ளார். மேலும், ஆஃப்கானிஸ்தான் ஸ்பின்னர் முஜீப் உர் ரஹ்மான், ரஷீத் கான் ஆகியோர் முறையே 4 மற்றும் 5ஆவது இடங்களை பிடித்துள்ளனர். இந்திய வீரர் குல்தீப் யாதவ் 9ஆவது இடத்திலிருப்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ண அணியில் சூர்யகுமார்

மொகாலி, செப். 22

எதிர்வரும் உலகக் கோப்பை தொடருக்கான இந்திய அணியில் நிச்சயம் சூர்யகுமார் யாதவ் இருப்பார் என இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் ராகுல் திராவிட் தெரிவித்துள்ளார். ஒருநாள் கிரிக்கெட்டில் சூர்யகுமார் யாதவின் உடல் தகுதி குறித்து பலரும் கேள்வி எழுப்பி வரும் நிலையில் திராவிட் இதனை தெரிவித்துள்ளார்.

உலகக் கோப்பை கிரிக்கெட் 2023 தொடர் அக்டோபர் 5-ம் தேதி முதல் நவம்பர் 19-ம் தேதி வரை இந்தியாவில் உள்ள 10 நகரங்களில் நடைபெறவுள்ளது. தொடரை இந்தியா நடத்துகிறது. போட்டியில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, வங்கதேசம், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 நாடுகள் பங்கேற்கின்றன. இந்த தொடருக்கான 15 வீரர்கள் இடம்பெற்றுள்ள இந்திய அணியில் வலது கை சுழற்பந்து வீச்சாளர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு முன்னதாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலிய அணியுடன் இந்தியா விளையாடுகிறது.

இன்று இந்தத் தொடரின் முதல் போட்டி தொடங்க உள்ளது. வரும் 27ஆம் திகதி அனைத்து அணிகளும் 15 வீரர்கள் அடங்கிய இறுதி அணியை அறிவிக்க வேண்டி உள்ளது. "27ஆம் திகதி குறித்து சூர்யகுமார் கவலை கொள்ள தேவையில்லை. உலகக் கோப்பை தொடருக்கான அணியை நாங்கள் தேர்வு செய்துவிட்டோம். அதில் அவர் உள்ளார். இந்த முடிவில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அவரிடம் உள்ள தனித்திறனை நாங்கள் பார்த்துள்ளோம். அவரது ஆட்டத்தை ரி -20 கிரிக்கெட்டில் நீங்கள் பார்த்து உள்ளீர்கள். ஆறாவது துடுப்பாட்ட வீரராகஅவர் ஆட்டத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவார். அதை அவர் நிச்சயம் செய்வார் என நம்புகிறோம். ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடரின் முதல் 2 போட்டிகளில் அவர் விளையாடுவார். அவர் தனது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தை மேம்படுத்துவார்" என்று ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார்.

# ரி-20இல் வரும் பணத்துக்காகவே ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு! குயின்ரன் டி கொக் தெரிவிப்பு



டர்பன், செப். 22

எதிர்வரும் உலகக் கோப்பை தொடர் தான் தென்னாபிரிக்க அணிக்காக டி கொக், விளையாடும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் தொடர். அதன்பிறகு ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அவர் அறிவித்துள்ளார். இந்த சூழலில் ஓய்வுக்கான காரணம் குறித்து அவர் மனம் திறந்து பேசியுள்ளார்.

30 வயதான டிகொக், சர்வதேச கிரிக்கெட்டில் தென்னாபிரிக்க அணிக்காக கடந்த 2012 முதல் விளையாடி வருகிறார். இதுவரை 54 டெஸ்ட், 145 ஒருநாள் மற்றும் 80 இருபது - 20 போட்டிகளில் விளையாடி உள்ளார். அதன் மூலம் மொத்தமாக 11,753 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். கடந்த 2021ஆம் ஆண்டின் இறுதியில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். தற்போது ஒருநாள் கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெற உள்ளார். விக்கெட் காப்பாளர், துடுப்பாட்ட வீரரான அவர் ஐபிஎல் கிரிக்கெட்டில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் தனது ஓய்வுக்கான காரணம் குறித்து அவர் பேசியுள்ளார்.

"நான் 11 ஆண்டுகளாக சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடி வருகிறேன். இந்த காலத்தில் அணிக்கு என்னால் இயன்றவரை விஸ்வாசமாக இருந்துள்ளேன். எனது கிரிக்கெட் வாழ்வில் அணிக்காக சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தி உள்ளேன் என எண்ணுகிறேன். உரிமையாளர் அணிகளின் 20 கிரிக்கெட் லீக் போட்டிகளில் கிடைக்கும் பணத்துக்காக தான் இந்த ஓய்வு முடிவை எடுத்துள்ளேன். அதை நான் மறுக்கவில்லை. எனது கிரிக்கெட் வாழ்வின் கடைசி கட்டத்தில் தான் இதனை செய்கிறேன். எந்தவொரு சாமானய மனிதனும் செய்ய விரும்பும் செயல் இது. அதைத்தான் நான் செய்கிறேன்.

நான் அணிக்கு விஸ்வாசமாக இருந்திருக்கவில்லை என்றால் நிச்சயம் 5 ஆண்டுகளுக்கு முன்பே இருபது -20 லீக் தொடர்களில் விளையாட சென்றிருப்பேன் என்பதை இப்போது தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் அப்போது ஃப்ரான்சைஸ் கிரிக்கெட் தொடர்கள் உச்சத்தில் இருந்தன" என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சீனாவின் அகண்ட ஆசியக் கனவும் பட்டுப்பாதை திட்டமும்:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# இந்தியாவை சுற்றிய ஆபத்தும் இத்தாலியின் வெளியேற்றமும்!

சீனாவின் பட்டுப்பாதை திட்டத்தில் இத்தாலி இணைந்ததால், அமெரிக்காவுடனான உறவில் பிரச்சனை ஏற்பட்டதாகவும், இதை சரி செய்யவே, அத் திட்டத்தில் இருந்து விலக இத்தாலி முடிவெடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

புதிய பட்டுப்பாதை திட்டம் எனும் சீனாவின் கனவுத் திட்டத்தில் இத்தாலியும் 2019 இல் இணைந்தது.

சீன அதிபர் ஜின்பிங்கின் ரோம் பயணத்தின் போது 2.8 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான 29 ஒப்பந்தத்தில் இத்தாலி மற்றும் சீன தலைவர்கள் கையெழுத்திட்டனர்.

ஆனால், அதே நேரம் இத்தாலியின் இந்த முடிவானது அதன் மேற்கத்திய கூட்டாளி நாடுகளை கவலையுற செய்தது. சீனாவின் புதிய பட்டுப்பாதை திட்டத்தில் இணையும் முதல் வளர்ந்த மேற்கத்திய நாடு இத்தாலி. தற்போது இத் திட்டத்தில் இருந்து இத்தாலி விலக முன் வந்ததாக செய்திகள் வெளியாகி உள்ளன.

**வெளியேறும் இத்தாலி:**

கடந்த வாரம் டெல்லியில் நடந்த ஜி20 மாநாட்டின் இடையே, சீன பிரதமர் லி கெகியாங்கை, இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி சந்தித்துப் பேசினார். அப்போது, பட்டுப்பாதை திட்டத்தில் இருந்து விலக இத்தாலி முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தார். ஆயினும் சீனாவுடன் நட்புறவை தொடர விரும்புவதாகவும் மெலோனி கூறியுள்ளார்.




சீனாவின் கனவுத் திட்டமான பட்டுப்பாதை திட்டத்தில் இணையும் ஒப்பந்தத்தில் 2019-ம் ஆண்டு இத்தாலி அதிகாரப்பூர்வமாகக் கையெழுத்திட்டது. ஆனால், அத் திட்டம் அந்நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்க சிறிதும் உதவி செய்யவில்லை என்று இத்தாலிய பாதுகாப்பு அமைச்சர் கைடோ க்ரோசெட்டோ கடந்த ஜூலை மாதம் கூறியிருந்தார். இதன்பின் பெய்ஜிங்கிற்குச் சென்ற இத்தாலிய வெளியுறவுத்துறை அமைச்சர் அன்டோனியோ தஜானி, பட்டுப்பாதை பற்றி விமர்சன ரீதியாக பேசியதாகச் செய்திகள் தெரிவித்தன. மேலும், பட்டுப்பாதை திட்டம் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை என்றும் இத்தாலி தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

**பட்டுப்பாதையின் உருவாக்கம்:**

பட்டுப் பாதைத் திட்டம் வெற்றியடைந்தால், அமெரிக்காவிற்கு சவால் விடக்கூடிய அளவுக்கு, சீனா கிழக்கத்திய நாடுகள் மற்றும் உலக நாடுகளின் மையக் கேந்திரமாக உயரும். அது சீனாவிற்கு மாபெரும் வெற்றியாக இருக்கும் என்கிறார்கள் அரசியல் நிபுணர்கள். இதனால் பொருளாதாரத்திற்கும் அப்பாற்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த விரிவான அரசியல் செல்வாக்கு சீனாவுக்கு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

பட்டுப் பாதையை சீனா அமைப்பதன் நோக்கம், தடையற்ற பொருளாதாரம், அனைத்து நாடுகளும் பலனடையும், கூட்டாளி நாடுகளின் நலன்கள் ஊக்கமடைவதோடு, சீனாவும் நலம் பெறும் என்ற போதிலும் சீனாவை மையப்படுத்திய மிகப்பெரிய அரசியல் மற்றும் இராணுவ முக்கியத்துவம் அதிகரிப்பதாக மேற்குலகால் குற்றஞ்சாட்டப்படுகிறது.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த பட்டுப் பாதை பெய்ஜிங்கில் இருந்து 2000 கி.மீ.ல் உள்ள பாதை என்பது ஒற்றைப் பாதை இல்லை. அத்துடன் வரலாற்று உண்மையுடன் மிகக் குறைந்த தொடர்பையே கொண்டுள்ளது என வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.




ஆயினும் காலப் போக்கில் அமெரிக்கா, உலக மேலாதிக்க வர்த்தக சக்தியாக உருவெடுத்தபின் இந்த பட்டுப் பாதை முக்கியத்துவம் அற்றுப் போனது.

**சீனாவின் ஆசியக் கனவு:**

தெற்காசிய நாடுகள் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு சீன அதிகளவில் கடன்களை வழங்கி அந்நாடுகளை மீள முடியாத சுமையில் சிக்க வைப்பதாக முன்பே குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்ற நிலையில், சீனாவின் அகண்ட ஆசியக் கனவின் வெளிப்பாடாக, பட்டுப் பாதை என்பது சீனாவின் மையக் கொள்கையாகவும், முன்னணிக் கொள்கையாகவும் இருக்கிறது.

சீனா மற்றய நாடுகளுக்கு கடனுதவி கொடுக்கும் போது, அதை வட்டியும் முதலுமாக எடுக்கப் பார்க்கும் என்றும், லாவோஸில் நாட்டில் சீனாவின் முதலீடு அந்த நாட்டையே பாரிய கடனாளி ஆக்கியதாகவும் கூறப்படுகிறது.




சீனாவின் முதலீட்டால் பிற நாடுகள் உடனடி ஊக்கம் பெற்றாலும், நீண்டகால அடிப்படையில் அவை பாதிப்பை சந்திக்க நேரிடும். இதற்கு சான்றாக லாவோஸ் நாட்டு அரசுடன் இணைந்து, அந்த நாட்டின் ஊடாக செல்லும் ரயில் திட்டத்தை உருவாக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டது. இந்தத் திட்டத்திற்கு ஏழு பில்லியன் டாலர்கள் செலவாகும்.

மக்கள் தொகை லாவோஸில் குறைவாக இருந்தாலும் கூட, அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 10 பில்லியன் டாலர்கள் அளவுக்கு பங்களிப்பு செய்கிறது. இது லாவோஸின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் சுமார் மூன்றில் இரண்டு பகுதி. லாவோஸ் இதை எப்படி திருப்பச் செலுத்தும் என்பது கேள்விக்குறியே.



**பாகிஸ்தானில் சீன ஆதிக்கம்:**

பெருஞ் சாலைகள், ரயில்பாதை, மின்சார வசதிகள், வேளாண் மேம்பாடு என பாகிஸ்தானுக்கு சீனா பாரிய அளவில் உதவி வருகின்றது.

அத்துடன் எல்லை தாண்டி வளர்ந்து வரும் இஸ்லாமிய பயங்கரவாதத்தின் மீது நடவடிக்கைகள் எடுக்க இராணுவ உதவிகளையும் சீனா செய்கிறது.



மத்திய ஆசியாவில் கிர்கிஸ்தான், தஜகிஸ்தான் நாடுகளில் பாரிய மின்சார வசதிகளை சீனா நிறுவியுள்ளது. அதேவேளை அங்கு தனது கண்காணிப்பை பலப்படுத்தியும் உள்ளது.

அதேபோல் அண்மைய ஆண்டுகளில் அபிவிருத்தி கட்டமைப்புத் துறைக்காக சீனா பல முதலீடுகளை கம்போடியாவில் செய்துள்ளது. இதனாலேயே தென்சீனக் கடலில் ஏற்பட்டிருக்கும் பதற்றம் குறித்து சீனாவை விமர்சிக்க முடியாமல் கம்போடியா மௌனம் காக்கிறது.

**இந்தியாவை சுற்றி சீனா!**

இந்தியாவை சுற்றி, சீனாவின் அயல்நாட்டு அபிவிருத்தித் திட்டங்களை, வெறுமனே பொருளாதார கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்கவில்லை. ஆசியப் பிராந்தியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சீனா முயல்வதாகவும், குறிப்பாக, இந்தியப் பெருங்கடலை சீனா கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இந்தியா பார்க்கின்றது.

பாகிஸ்தான், மியான்மர், இலங்கை போன்ற நாடுகளில் சீனா பல முதலீடுகளை செய்துள்ளது. இவற்றை, இந்தியாவை சுற்றிவளைக்கும் நோக்குடன் செயற்படுவதாக இந்தியா பார்க்கின்றது. இந்த நோக்கத்திலேயே பட்டுப் பாதைத் திட்டம் மீது, அதன் உள்நோக்கங்கள் மீதும் இந்தியா அவநம்பிக்கை கொண்டுள்ளது.

சீனாவுடன் நீண்டகால பிராந்திய மோதல்களை கொண்டுள்ள இந்தியா, பட்டுப் பாதையானது மாபெரும் பொருளாதார தொடரமைப்பாக மட்டும் இருக்காது, சீனாவை மையப்படுத்திய மிகப்பெரிய அரசியல் மற்றும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என ஐயப்படுகிறது.

# இந்தியா - கனடா மோதலில் அமெரிக்கா யார் பக்கம்?

## மேற்குலக நாடுகள் கவலை ஏன்?

**ஜேம்ஸ் லாண்டேல்**

கடந்த ஜூன் மாதம் கனடாவில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக கனடாவுக்கும், இந்தியாவுக்கும் இடையே ஒரு கசப்புணர்வு ஏற்பட்டுள்ளது. தற்போதைய மோதல் போக்கு இந்தியாவின் சர்வதேச உறவுகளில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்திவிடக் கூடாது என மேற்குலக நாடுகள் கவலைப்படுகின்றன. இந்தியாவின் சர்வதேச உறவுகளைப் பேண இந்த நாடுகள் கடுமையாக உழைக்கின்றன.

அமெரிக்காவும் மற்ற மேற்குலக நாடுகளும், இந்தப் பிரச்னையால் தங்களுடனான இந்தியாவின் உறவுகளுக்கு பாதிப்பு ஏற்படுமோ என்று தான் கவலைப்படுகின்றன.

உலக அரசியலில் பெரும்பங்கு வகிக்கும் மாபெரும் புவிசார் அரசியல் என்ற புள்ளியில் மேற்கத்திய நாடுகளுக்கு இந்தியா ஒரு முக்கியத் தேவையாக விளங்குகிறது.

தற்போதைய நிலையில், இந்தியா ஒரு வளர்ந்து வரும் சக்தி மட்டுமல்ல - உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாகவும் இருக்கிறது. உலக அளவில் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ள இந்தியா, சீனாவுக்கு எதிரான ஒரு மிகப் பெரிய அரணாகவும் இருக்கும் என மேற்குலக நாடுகள் பார்க்கின்றன.






யுக்ரேனின் மேற்கத்திய நட்பு நாடுகள், டில்லியில் நடைபெற்ற ஜி20 மாநாட்டின் போது, ரஷ்யாவின் படையெடுப்பிற்கு வலுவான எதிர்ப்பு தெரிவிக்காத கூட்டறிக்கையை ஏற்றுக்கொண்டது இதை வெளிப்படையாகக் காட்டுகிறது.

இந்தக் கூட்டறிக்கையின் மீது சர்ச்சையை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதன் மூலம் இந்தியாவுடனான தங்கள் உறவைப் பாதுகாக்க இந்நாடுகள் விரும்பின. இது யுக்ரேனில் பல தரப்புக்கும் கோபத்தை ஏற்படுத்தியது.

மேற்கத்திய ராஜ தந்திரிகளிடையே தற்போது உள்ள மற்றொரு அச்சம் என்னவென்றால், கனடா-இந்தியா விவகாரத்தில் எந்த நாட்டிற்கு ஆதரவு தெரிவித்தாலும் மோசமான விளைவுகள் ஏற்படும் என்பது தான்.

### கனடா முறையீட்டிற்கு அமெரிக்கா பதில் என்ன?

கடந்த ஜூன் மாதம் மேற்கு கனடாவில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் என்ற ஒரு சீக்கிய ஆர்வலர் படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் இந்தியா இருப்பதாக அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியபோது இரு நாடுகளுக்கும் இடையிலான கசப்புணர்வு இந்த வாரம் கணிசமாக அதிகரித்தது.

குளோபல் சவுத் என அழைக்கப்படும் வளரும் நாடுகளின் தலைவராக இந்தியா தன்னை முன்னிறுத்த கடந்த சில மாதங்களாக முயற்சி செய்து வருகிறது. யுக்ரேன் மீதான ரஷ்யாவின் போரைக் கண்டிக்க இந்த நாடுகளில் பல மறுத்துவிட்டன.

ஆனால், யுக்ரேன் போரால் இந்நாடுகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை அந்நாடுகளுக்குப் புரியவைக்க அமெரிக்காவும் சில ஐரோப்பிய நாடுகளும் உண்மையான பல ராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்நிலையில், இரண்டு காமன்வெல்த் நாடுகளுக்கு இடையேயான இந்தப் பகை உணர்வு, குளோபல் சவுத் மற்றும் அட்லாண்டிக் பிரதேச சக்திகளுக்கு இடையேயான மோதலாக மாறுவதை மேற்குலக நாடுகளின் ராஜதந்திரிகள் விரும்ப மாட்டார்கள்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் ஆகியோரிடம் கனடா பிரதமர் ட்ரூடோ இந்த விவகாரத்தை முன்வைத்ததாக கனடா வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இப்போதைக்கு கனடாவின் நட்பு நாடுகள் அனைத்தும் அந்நாட்டுக்கு விசுவாசமாக இருப்பதுடன் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கின்றன.

கனடாவில் நடந்த படுகொலையில் இந்தியாவுக்கு பங்கிருப்பதாக அந்நாட்டு அரசு எழுப்பியிருக்கும் குற்றச்சாட்டு "ஆழ்ந்த கவலையை" ஏற்படுத்தியதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அதே நேரம், "கனடாவின் விசாரணை தொடர்வதும், குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவதும் மிகவும் முக்கியமானது," என்று கூறியுள்ளது.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பெரும் எண்ணிக்கையில் சீக்கியர்கள் வாழ்ந்துவரும் நிலையில், தற்போதைய விவகாரம் அந்நாடுகளின் உள்ளூர் அரசியலில் கடும் விளைவுகளை ஏற்படுத்தும்.



### பிரிட்டன், ஆஸ்திரேலியா நிலைப்பாடு என்ன?

பிரிட்டன் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜேம்ஸ் கிளவர்லி பேசியபோது, "கனடா எழுப்பும் தீவிரமான கவலைகளுக்கு பிரிட்டன் மிகவும் கவனமாக செவி சாய்க்கும்," என்றார்.

திங்கள் கிழமையன்று கனடா வெளியுறவுத்துறை அமைச்சர் மெலனி ஜோலியிடம் இது குறித்துப் பேசியதாக அவர் தெரிவித்தார். மேலும் 'கனடாவின் கவலையை இங்கிலாந்து தீவிரமாக எடுத்துக் கொண்டது," என்றார்.

இந்தியாவுடனான வர்த்தகப் பேச்சு வார்த்தையை பிரிட்டன் நிறுத்துமா என்பது குறித்து எந்தப் பதிலையும் தெரிவிக்க அவர் மறுத்துவிட்டார். ஆனால் கனடாவின் விசாரணை முடிவடையும் வரை இங்கிலாந்து காத்திருக்கும் என்பதுடன், மேலும் தொடர்ந்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் என்றும் அவர் கூறினார்.

"கனடா மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் இங்கிலாந்தின் மிக நெருங்கிய நண்பர்களாக உள்ளன. அவர்கள் காமன்வெல்த் பங்காளிகள்," என்று கிளவர்லி மிகவும் கவனமாக கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

ஆஸ்திரேலியாவின் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர், கனடாவின் குற்றச்சாட்டுகள் ஆஸ்திரேலியாவுக்கு "ஆழ்ந்த கவலையை" ஏற்படுத்தியிருப்பதாகவும், 'இந்தியாவின் மூத்த அதிகார மட்டங்களில் ஆஸ்திரேலியாவின் கவலைகளை தெரிவித்ததாகவும்," கூறினார்.

எனவே இப்போதைக்கு, கனடா மேற்கொண்டு வரும் விசாரணையின் இறுதி வரை வரை அமெக்காவும் மற்ற மேற்குலக நாடுகளும் பொறுத்திருந்து கவனிப்பதைத் தவிர வேறு நிலை எடுக்க வாய்ப்பில்லை.

கனடாவின் உளவுத் துறைக்கு ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலை தொடர்பாகத் தெரிந்த தகவல்களை சில நட்பு நாடுகளுக்கு கனடா அரசு தற்போது வழங்கலாம். அதில், இந்தப் படுகொலையில் இந்தியாவின் பங்கு இருக்கிறதென்பது உறுதிப்படுத்தப்பட்டால் மேற்குலகின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

அப்படி நடந்தால், அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகள், இந்தியாவை ஆதரிப்பதா அல்லது கனடாவை ஆதரிப்பதா என்ற இரண்டில் ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். சட்டத்தை ஏற்பது மற்றும் நடைமுறை அரசியலின் கடினமான தேவையை ஆதரிப்பது என்ற இரண்டு விஷயங்களுக்கு இடையே எதைத் தேர்வு செய்யவேண்டும் என்பதில் அந்நாடுகள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டிய கட்டாயம் எழும்.

கடந்த காலங்களில், ரஷ்யா, ஈரான் அல்லது சவுதி அரேபியா போன்ற நாடுகள் வெளிநாட்டவர்களைக் கொன்றதாகக் கூறப்படும் சம்பவங்களின் போது மேற்கத்திய நாடுகள் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

ஆனால், அந்தப் பட்டியலில் இந்தியா சேருவதை இப்போது மேற்குலகம் விரும்பவில்லை.

●